Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 189

வெள்ளிக்கிழமை
03 ஜூன் 2022

வைகாசி 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16
விலை : ரூ. 50

முச்சந்தி முரளி



"அப்ப இன்னும் ஆறு பில்லியன் டொலர் வராட்டி நிலைமை இன்னும் நாறப்போகுது எண்டு சொல்லுங்கோ..."

## நெருக்கடியைத் தீர்க்க

# ஆறு பில்லியன் டொலர் இந்த ஆண்டில் தேவை!

### கையைப் பிசைகிறது இலங்கை; நிலைமை இன்னும் சிக்கலாகும்

**கொழும்பு, ஜூன் 3**

**கடன்களை மீளச் செலுத்துவதற்கும், வெளிநாட்டு ஒதுக்கத்துக்காகவும் இந்த ஆண்டு இலங்கைக்கு 6 பில்லியன் டொலர் தேவை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.** 15 ➤

## தனியார் பஸ் சேவைகள் திங்கள் தடைப்படலாம்!

யாழ்ப்பாணம், ஜூன் 3

வடக்கு மாகாணத்துக்கும், யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குள்ளும் பஸ்களுக்கான எரிபொருள் சீராகக் கிடைக்காதுவிட்டால் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பஸ் சேவைகள் தடைப்படலாம் என்று தனியார் பேருந்துச் சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

எரிபொருள் சீராகக் கிடைக்காதுவிட்டால் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பஸ் சேவைகள் தடைப்படும் என்று மேல் மாகாண தனியார் பஸ் 15 ➤

## மக்கள் விரும்புகின்ற ஆட்சி அமைந்தாலே நாட்டுக்கு மீட்சி

### ஜே.வி.பி. வலியுறுத்துகின்றது



கொழும்பு, ஜூன் 3

நாட்டைக் குட்டிச் சுவராக்கிய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசும் வேண்டாம் மக்களால் நிராகரிக்கப்பட்ட பிரதமர் ரணில் விக்கிரம 10 ➤

## இறக்குமதி மதுபான விலைகளும் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 3

இறக்குமதி செய்யப்படும் சகல மதுபானங்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இறக்குமதி செய்யப்படும் மதுபானங்களுக்கான தீர்வை, நிதி அமைச்சால் 100 சதவீதத்தால் அதிகரிக்கப் 10 ➤

## உயர்தரப் பரீட்சை ஒத்திவைப்பு!

கொழும்பு, ஜூன் 3

க.பொ.த. உயர்தரப் பரீட்சைத் திகதியை மாற்றுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். 10 ➤

## கோஷ்டி மோதலில் ஐவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

பருத்தித்துறை, சுப்பர்மடத்தில் நேற்றுமுன்தினம் நடந்த கோஷ்டி மோதலில் 5 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர். 15 ➤

## நீராடச் சென்ற சிறுவர்கள் இருவர் நீரில் மூழ்கிச் சாவு!

### இருவர் மருத்துவமனையில் வவுனியாவில் சோகம்

வவுனியா, ஜூன் 3

வவுனியா, ஈரப்பெரியகுளத்தில் நீராடச் சென்ற இரு சிறுவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். மேலும் இருவர் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு மருத்து 15 ➤

## நள்ளிரவில் வீடு புகுந்து 20 பவுண் நகை திருட்டு!

யாழ்ப்பாணம், ஜூன் 3

இளவாலையில் நள்ளிரவில் வீடு புகுந்து 20 நகைகள் திருடப்பட்டுள்ளன என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இளவாலை, சிறுவிளான் பகுதியில் உள்ள வீடொன்றில் நடந்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு அந்த வீட்டில் நிகழ்வொன்று நடந்த நிலை 10 ➤



## மின்வெட்டு நேரத்தில் விபத்து கோப்பாயில் இருவர் காயம்!

யாழ்ப்பாணம், ஜூன் 3

கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்று இரவு நடந்த விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர். மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்த நேரத்தில், இரவு 9 மணி 10 ➤

## மருத்துவமனைக்குள் புகுந்து மருத்துவரின் மீது தாக்குதல்!

### 8 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 3

கொடிகாமம் பிரதேச மருத்துவமனைக்குள் புகுந்து மருத்துவரைத் தாக்கினர் என்ற குற்றச்சாட்டில் 8 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுப் பிற்பகல் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. மருத்து 15 ➤

## வெள்ளியில் மூடப்படும் தொழில் திணைக்களம்

### ஏனைய திணைக்களங்கள் தொடர்பில் அறிவித்தல் எதுவுமில்லை

கொழும்பு, ஜூன் 3

தொழில் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களை வெள்ளிக்கிழமைகளில் மூடுவதற்கு தொழில் மற்றும் வெளிவிவகார அமைச்சு தீர்மானித்துள்ளது. இந்தத் தீர்மானத்தால் தொழில் திணைக்களம் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் 15 ➤

## 375 சிலிண்டர்கள் இன்று விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்ப்பாணத்தில் உள்ள 5 பிரதேச செயலகங்களுக்கு தலா 75 சமையல் எரிவாயு சிலிண்டர் 15 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டில் வெடித்த வன்முறை:

# புதிய விசாரணைக் குழு ஜனாதிபதியால் நியமனம்

கொழும்பு, ஜூன் 3

**நாட்டில் கடந்த ஏப்ரல் 31 தொடக்கம் கடந்த மே 15 ஆம் திகதிவரை நடை பெற்ற அனைத்து வகையான குற்றச்சம்பவங்கள் குறித்து விசாரிக்க புதிய விசாரணை ஆணைக்குழு ஒன்று ஜனாதிபதியால் நிய மிக்கப் பட்டுள்ளது.**

இது குறித்து ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையில்,

குறித்த காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற வன்முறைகள், தீவைப்புகள், கொள்ளை மற்றும் கொலை உட்பட அனைத்து வகையான சொத்துக்கள் சேதம் மற்றும் உயிரிழப்புகள் குறித்த விசாரணைஅறிக்கையை வழங்குவதற்கு விசாரணை ஆணைக்குழு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக உயர் நீதிமன்ற நீதிபதி, ஜனாதிபதி வழக்கறிஞர் பீ.பீ. அலுவிஹாரே, முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ்.எம். விக்கிரமசிங்க மற்றும் மேலதிக பிரதம மதிப்பீட்டாளர் என்.ஏ. எஸ். வசந்தகுமார ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் புவனெக ஹேரத் ஆணைக்குழுவின் செயலாளராகச் செயற்படவுள்ளார்.

இவர்களுக்கான நியமனக்கடிதங்கள் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வால் கையளிக்கப்பட்டன - என்றுள்ளது.

இதேவேளை, இந்த வன்முறைகளின் போது முப்படையினர் அசமந்தமாகச் செயற்பட்டனரா என்பது தொடர்பில் ஆராய முன்னாள் தளபதிகள் தலைமையிலான மூவர் கொண்ட ஜனாதிபதி விசாரணைக்குழுவும் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)


31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 18 . 08 . 1951

மறைவு 05 . 05 . 2022



கடந்த (05.05.2022) வியாழக்கிழமை அன்று
சிவபதமடைந்த

**அமரர் ஈஸ்வரபவானி சோமசுந்தரம்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (02.06.2022) வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (04.06.2022) சனிக்கிழமை முற்பகல் 09.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் நோய்வாய்ப்பட்டிருந்த வேளை யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரிந்த வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் மற்றும் தெல்லிப்பழை வைத்தியசாலையில் பணிபுரிந்த வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் மற்றும் அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து எமக்கு சகலவழிகளிலும் உதவிகள் புரிந்த பிரமுகர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோருக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், போசனமளித்து உதவியவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியோருக்கும், நேரில் கலந்துகொள்ள முடியாத நிலையில் நவீன தொடர்புசாதனங்கள் மூலமாகவும் தங்கள் துயரைப்பகிர்ந்துகொண்ட உள்நாட்டு, வெளிநாட்டு உறவினர்கள், நண்பர்களிற்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

இல.105, இராச வீதி,
கோப்பாய்.

தொடர்புகளுக்கு: ஈ. சரவணபவன் (சகோதரர்)
071 411 5000 / 071 411 5002




## ம.எண்ணெண்ணெய் வழங்கலில் குழப்பம் ஏற்படுத்தியவர் கைது!

முல்லைத்தீவு, ஜூன் 3

புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் வழங்கும்போது குழப்பம் ஏற்படுத்தியவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

6 ஆயிரத்து 600 லீற்றர் மண்ணெண்ணெய் சங்கத்துக்குக் கிடைத்தது. அதனை நேற்றுமுன்தினம் இரவு 11 மணிக்கு மக்களுக்கு வழங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. முதற்கட்டமாக கடற்றொழிலாளர்களுக்கு 20 லீற்றர் வீதம் 4ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெய்யும் அதன்பின்னர் விவசாயிகளுக்கும் மக்களுக்கும் பங்கிட்டு வழங்கப்பட்டது. இதன்போது முரண்பட்ட நபரொருவரே கைது செய்யப்பட்டார். (ஒ-14,19)

## காணாமற்போன சிறுமி மீட்கப்பட்டார்!

*மிருசுவிலில் சம்பவம்*

சாவகச்சேரி, ஜூன் 3

மிருசுவில் வடக்குப் பகுதியில் நேற்று மாலை காணாமற் போன இரண்டரை வயதுச் சிறுமி இரவு 9.30 மணியளவில் மீட்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

குறித்த சிறுமி தனது தாயாருடன் வீட்டு முற்றத்தில் நின்றுள்ளார். தாயார் உள்ளே சென்றுவிட்டு வெளியே வந்து பார்த்தபோது சிறுமியைக் காணவில்லை. இதையடுத்து சிறுமியைத் தேடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டன. இந்த நிலையில் இரவு 9.30 மணியளவில் வீட்டிலிருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவிலிருந்து சிறுமி மீட்கப்பட்டுள்ளார். சிறுமிக்கு எந்த அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை என்று சட்டப் பரிசோதனையிலும் விசாரணைகளிலும் உறுதிப்படுத்தப்பட்டது. (ம-14,9,159)

## சமுர்த்தி பயனாளர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகள்

சாவகச்சேரி, ஜூன் 3

தென்மராட்சியைச் சேர்ந்த சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் காத்திருப்போர் பட்டியலில் உள்ளோருக்கு அரசால் அறிவிக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவுகள் அந்தந்த சமுர்த்தி வங்கிகளால் விநியோகிக்கப்படுகின்றன.

இதற்கான கட்டுநிதி சமுர்த்தி திணைக்களத்தால் அந்தந்த சமுர்த்தி வங்கிகளுக்கு வழங்கப்பட்டதையடுத்தே குறித்த கொடுப்பனவு விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவுகள் பிரதேசத்திலுள்ள சுமார் 8 ஆயிரம் சமுர்த்தி பயனாளிகளுக்கும் காத்திருப்போர் பட்டியலில் உள்ள சுமார் 4 ஆயிரம் பேருக்கும் விநியோகிக்கப்படுகின்றன.

அதன்படி காத்திருப்போர் பட்டியலில் உள்ளோருக்கு தலா 5ஆயிரம் ரூபா வீதமும் சமுர்த்திப் பயனாளர்களுக்கு அவர்களின் முன்னைய கொடுப்பனவுடன் மேலதிகக் கொடுப்பனவும் வழங்கப்படுகின்றது.

ஏற்கனவே ஆயிரத்து 900 ரூபாவை பெற்றவர்களுக்கு மேலதிகமாக 3ஆயிரத்து 100 ரூபாவும், 3ஆயிரத்து 200 ரூபா பெற்றவர்களுக்கு மேலதிகமாக 3 ஆயிரத்து 100 ரூவாவும், 4ஆயிரத்து 500 ரூபா பெற்றவர்களுக்கு மேலதிகமாக 3ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படு கிறது. (ச-9)

## சீன நன்கொடை மருந்துகள் இன்று இலங்கைக்கு வரும்!

கொழும்பு, ஜூன் 3

சீனாவின் நன்கொடையின்கீழ் வழங்கப்படும் மருந்துகளின் முதல் தொகுதி இன்று இலங்கைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் தெரிவித்ததாவது:-

10 மில்லியன் யுவான் பெறுமதியான 5 லட்சத்து 12 ஆயிரத்து 640 உயிர்காக்கும் எனோக்ஸாபரின் சோடியம் ஊசி மருந்துகள் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் 50 வீதமானவை இன்று இலங்கையை வந்தடையும் - என்றுள்ளது. (ம)

## பொருளாதார, அரசியல் மறுசீரமைப்பு பிரதமர் ரணில் நாடாளுமன்றில் உரை!

கொழும்பு, ஜூன் 3

பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் அரசியல் மறுசீரமைப்பு சம்பந்தமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 7ஆம் திகதி சிறப்புரையாற்றவுள்ளார்.

ஜூன் மாதத்துக்கான முதல்வார நாடாளுமன்ற அமர்வு 7ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் ஆரம்பமாகின்றது. இதன்போதே பிரதமரின் உரை இடம்பெறவுள்ளது.

பிரதமரின் இந்த உரை உட்பட நாட்டில் நிலவும் பிரச்சினைகள் சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் இரு நாள்கள் விவாதம் இடம்பெறவுள்ளது. 7 மற்றும் 8ஆம் திகதிகளில் இவ்விவாதத்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற நடவடிக்கைகள் சம்பந்த மான கூட்டம், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று முற்பகல் நடைபெற்றது. இதன் போதே இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டது. இந்த வார நாடாளுமன்ற அமர்வின்போது குறைநிரப்பு பிரேரணை முன்வைக்கப்படும்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில், மே 9 சம்பவத்தின்போது கொல்லப்பட்ட ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள வுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீதான் விவாதம் இடம்பெறும். (ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுச்சீட்டுக்களை வழங்க முடியாத நிலை

## திடீரென அதிகளவானோர் விண்ணப்பிப்பதால் இந்த நிலை

**கொழும்பு, ஜூன் 3**

**கடவுச்சீட்டை பெறுவதற்கு ஒருநாள் சேவையினூடாக அதிகபட்சமாக 2 ஆயிரத்து 500 கடவுச்சீட்டுக்களே விநியோகிக்கப்படும் நிலையில் நாளாந்தம் சமர்ப்பிக்கப்படும் அனைத்து விண்ணப்பங்களுக்கும் கடவுச் சீட்டை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என குடிவரவு மற்றும் குடிய கல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.**

இதன்காரணமாக கடந்த ஏப்ரல் மாத இறுதியிலிருந்து இதுவரை கடவுச்சீட்டுக்காக அதிக கேள்வி ஏற்பட்டுள்ளது.

இது குறித்து திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் பியூமி பண்டார தெரிவிக்கையில்;

காலை 6 மணி முதல் இரவு 10 மணிவரை சேவையை வழங்குவ தன் ஊடாகவே அதிகபட்ச கடவுச் சீட்டுகளை விநியோகிக்க முடிகிறது.

இதன் காரணமாக சாதாரண நடைமுறையின் கீழ் கடவுச்சீட்டு களை வழங்குவதில் தாமதம் ஏற் பட்டுள்ளது.

இந்த ஆண்டில் அதிகபட்சமாக கடந்த மார்ச் மாதத்தில் 74ஆயி ரத்து 890 கடவுச்சீட்டுகளும் ஜன வரி, பெப்ரவரி, ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் 50ஆயிரம் கடவுச் சீட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை 2021ஆம் ஆண் டில் வழங்கப்பட்ட மொத்த கடவுச் சீட்டுகளின் எண்ணிக்கை 3 லட் சத்து 82ஆயிரத்து 506 ஆக பதிவாகியுள்ளது- என்றார். (ச-இ)

*சா/ தரப் பரீட்சை விடைத்தாள்*

## திருத்தப் பணிகள் 17 இல் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 3

நடைபெற்று முடிந்த சாதாரண தரப் பரீட் சையின் முதற்கட்ட விடைத்தாள் திருத்தும் பணிகள் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம் பமாகவுள்ளது எனப் பரீட்சைகள் திணைக் களம் தெரிவித்துள்ளது.

இந்தப் பணிகள் எதிர்வரும் 26ஆம் திகதி வரை இடம்பெறும் எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்ம சேன தெரிவித்துள்ளார்.

அதேவேளை இரண்டாம் கட்ட விடைத் தாள் திருத்தும் பணிகள் எதிர்வரும் 30ஆம் திகதி முதல் ஜூலை 9ஆம் திகதி வரை இடம்பெறும். 85 பாடசாலைகளில் நிறுவப்படவுள்ள 106 மத்திய நிலையங் கள் ஊடாக இந்தத் திருத்தப் பணிகள் முன்னெடுக்கப்பட வுள்ளன.

விடைத்தாள்கள் திருத்தப்பணிகளில் 32ஆயிரத்து 368 அதிகாரிகள் ஈடுபடுத் தப்படவுள்ளனர் என பரீட்சைகள் ஆணை யாளர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
BARATHY
சித்தன்கேணி
A/L 2024
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்: 11.06.2022
சனிக்கிழமை
எமது மூன்று நிறுவனங்களிலும்
04.06.2022 நாளையிலிருந்து உங்கள்
அனுமதிகளை பெற்றுக் கொள்ள முடியும்.
அனுமதி பெறுவதற்கான
அலுவலக நேரம் தினமும்
யாழ்.நகரில் 8.00 am - 12.00 pm
சுன்னாகம் 3.30 pm - 05.30 pm
சித்தன்கேணி 3.30 pm - 05.30 pm
மேலதிக விபரங்களுக்கு
077 376 3511



## தமிழகத்தின் நிவாரணம் வவுனியாவை வந்தடைந்தது

வவுனியா, ஜூன் 3

தமிழகத்தால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருள்களில் 22 ஆயிரத்து 550அரிசிப்பொதிகளும் 750 பால்மா பைக்கற்றுக்களும் நேற்றுக் காலை ரயிலில் வவுனியாவை வந்தடைந்தன.

வவுனியா ரயில் நிலைய அத்தியட்சகரால் மாவட்டச் செயலக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்ட நிவாரணப்பொதிகள் வவுனியா பிரதேச செயலர்களிடம் வழங்கப்பட்டன.

அதற்கமைய வவுனியா பிரதேச செயலக பிரிவுக்கு 12 ஆயி ரத்து 315 அரிசிப் பொதிகள், 452 பால்மா பைக்கற்றுக்களும், செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்கு 4 ஆயிரத்து 675 அரிசிப்பொதிகள், 148 பால்மா பைக்கற்றுக்களும், வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவுக்கு 3 ஆயிரத்து 560 அரிசிப் பொதிகள், 116 பால்மா பைக்கற்றுக்களும் வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவுக்கு 2 ஆயிரம் அரிசிப் பொதிகள், 34 பால்மா பைக்கற்றுக்களும் வழங்கப்பட்டுள்ளன. இவை கிராம அலுவலர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக கிராம மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. (ஒ-14,18)

## பூச்சிக்கொல்லி மருந்துகள் நெடுந்தீவுக் கடலில் மீட்பு



யாழ்ப்பாணம், ஜூன் 3

நெடுந்தீவுக் கடலில் பூச்சிக் கொல்லி மருந்துகள் நேற்று கடற்படையால் மீட்கப்பட்டன. நெடுந்தீவு கடற்பரப் பில் சந்தேகத்துக்கிடமான பொதி ஒன்று மிதந்து வருவதை அவதானித்த கடற்படையினர், அதனை சோதனையிட்டபோதே அதில் பூச்சிக்கொல்லி மருந் துகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதன்போது 35 போத் தல் பூச்சிக்கொல்லி மருந்துகள் கைப்பற்றப்பட்டன.

குறித்த மருந்துகள் இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கடத்தப்படுவதாக சந்தேகிக்கும் கடற்படையினர், இது தொடர் பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற னர். (ஒ-14,20)




**ஏ**ண்டு நாளைக்கு முந்தி யாழ்ப்பாணத்தில உள்ள கொஸ்பிட்டல் ஒண்டில, 'ரொட்டேசனில வேலைக்கு வர ஏலாது, வழமை மாதிரி எல்லாரும் வேலைக்கு வரோணும்' எண்டு அந்தக் கொஸ்பிட்டல் பொறுப்பதிகாரி சொன்னவரெண்டதை பட்சி உங்களுக்குச் சொன்னதெல்லோ. அதில கொஞ்சத் திருத்தம். இன்னும் சுகாதாரத்துறையில வேலை செய்யிறவையை ரொட்டேசனில வேலைக்கு போகச் சொல்லி முறைப்படியான எந்த அறிவிப்பும் வரேலை. அப்பிடியிருக்க எப்பிடி இந்தக் கொஸ்பிட்டலில மட்டும் எல்லாரையும் ரொட்டேசனில வேலைக்கு வரச்சொல்ல முடியும்? எண்டு, அந்தக் கொஸ்பிட்டலோட சம்பந்தப்பட்ட ஆக்கள் பட்சியிட்ட உரிமையோட கேட்டிச்சினம். அவை சொல்லுற நியாயமும் சரிதான்.

அதோட என்னதான் ரொட்டேசன் முறை வந்தாலும், சுகாதாரச் சிற்றூழியர்களுக்கு அந்தமுறை பொருந்தாது எண்டும் ஒரு கதை அடிபடுகுது. எதெண்டாலும் அரசாங்கம் முறைப்படி அறிவிச்சால்தான் எல்லாம் தெளிவாகும். அப்பிடி சிற்றூழியர் எல்லாரும் வேலைக்கு ஒவ்வொருநாளும் வந்து, மற்றவை ரொட்டேசனில வேலைக்கு வந்தாலும் சிக்கல்தான். ஏனெண்டால், ஒவ்வொரு நாளும் வேலைக்கு வாறவைக்கும் ஒரே சம்பளம், 2 நாள் வீட்டில இருந்துட்டு 3 நாள் மட்டும் ஒப்பீஸுக்கு வாறவைக்கும் ஒரே சம்பளம் எண்டால் நியாயமில்லைத்தானே? அதோட ஒவ்வொருநாளும் வேலைக்கு வாறவைக்கு அதுக்கான பெற்றோல், போக்குவரத்துச் செலவு, சாப்பாட்டுச் செலவு எண்டு காசும் மேலதிகமாக கரையும். ஆனால் ரொட்டேசனில வாறவைக்கு அதிலையும் லாபம் இருக்கெல்லோ. அப்பிடி ஒரு தரப்புக்கு மட்டும் லாபம் வாற மாதிரி இந்த வேலைத்திட்டம் வருமெண்டால், மற்றத் தரப்பு கொந்தளிக்கும் தானே?

ஒரு திட்டத்தைக் கொண்டு வரவேணும் எண்டால் அதைப்பற்றி வடிவா அலசி, ஆராய்ஞ்சுபோட்டு நடைமுறைப்படுத்த வேணும். அதைவிட்டிட்டு எப்பிடியாவது காசை மிச்சம் பிடிக்கிறதுக்கு ஒரு வழி கிடைச்சிட்டால், கண்ணை மூடிக்கொண்டு அதை நடைமுறைக்கு கொண்டுவாறதெல் லாம் இன்னும் நெருக்கடியைப் பெரிசாக்குமே தவிர, குறைக்காது.

அதேமாதிரி எங்கட அரசாங்க உத்தியோகத்தர் மாரும் எப்ப லீவு கிடைக்கும், எப்ப வீட்டை நிக்கலாம் எண்டு ஆலாய்ப் பறக்கக்கூடாது. நேற்று தொழில் திணைக்களம் ஒவ்வொரு வெள்ளியும் பூட்டு எண்டு செய்தி வர, அதை எல்லாத் திணைக்களத்துக்கும் இனி வெள்ளி லீவு எண்டு கொஞ்சப் பேர் அடிச்சு விட்டிச்சினம். கொஞ்ச நேரத்திலயே காட்டுத்தீ மாதிரி அந்தச் செய்தி எல்லா இடமும் பரவிட்டுது. ஆனால் அரசாங்கம் அப்பிடி ஒரு அறிவிப்பையும் சாமம் வரைக்கும் விடேலை. இதெல்லாம் லீவுக்காக காத்திருக்கிற கொஞ்சப் பேர் செய்யிற வேலை. உங்கட கடமையுணர்ச்சிக்கு ஒரு அளவேயில்லையேடா !



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ கவனவீனத்தால் வயோதிபப் பெண் இறப்பு!

## கரவெட்டிப் பெண்ணின் இறப்புத் தொடர்பில் பருத்தித்துறை நீதிமன்றம் அதிரடி உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன் 3

**பெண்ணின் வயிற்றுக்குள் மருந்துகட்டும் துண்டை வைத்துத் தைத்த விவகாரத்தில், மருத்துவக் கவனவீனம் காரணமாகவே வயோதிபப் பெண் உயிரிழந்தார் என்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் தெரிவித்தது.**

இது தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொண்டு அறிக்கையிட வேண்டும் என்றும் நீதிவான் நெல்லியடிப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

நெல்லியடியிலுள்ள பிரபல தனியார் மருத்துவமனையில் ஜனவரி 11ஆம் திகதி மேற்கொண்ட அறுவைச் சிகிச்சையைத் தொடர்ந்து வயோதிபப் பெண்ணொருவர் உயிரிழந்தார்.

கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த மனோன்மணி குலவீரசிங்கம் (வயது 60) என்ற அந்தப் பெண், கர்ப்பப்பை புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார். அவரது கர்ப்பப்பையை அகற்றுமாறு மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

இதையடுத்து கடந்த டிசெம்பர் 10ஆம் திகதி நெல்லியடி பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையொன்றில் மகப்பேற்றியல் மருத்துவ நிபுணர் ஒருவர் தலைமையிலான குழுவினர் அவருக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொண்டனர்.

சிகிச்சைக்குப் பின்னர் அந்தப் பெண் வீடுதிரும்பிய போதிலும் ஜனவரி மாதம் 11ஆம் திகதி உடல் நிலை மோசமடைந்ததை அடுத்து அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அன்று இரவே அவர் உயிரிழந்தார்.

உடற்கூற்றுப் பரிசோதனையின் போது 50 சென்ரிமீற்றர் நீளமும் 10 சென்ரிமீற்றர் அகலமும் உள்ள மருந்துகட்டும் துண்டொன்று அவரது வயிற்றுக்குள் வைக்கப்பட்டு தைக்கப்பட்டமை தெரியவந்தது.

அந்தத் துண்டு இருந்த பகுதியில் உள்ள குடல் பழுதடைந்து, அதனால் ஏற்பட்ட கிருமித்தொற்றால் பெண் உயிரிழந்தார் என்று அறிக்கையிடப்பட்டது.

இது தொடர்பான வழக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் நடந்து வந்தது.

அனைத்து சமர்ப்பணங்களையும் கேட்ட நீதிபதி, வழக்கு விவரங்களை சட்டமா அதிபரிடம் அனுப்பியிருந்தார்.

இந்த நிலையில்; கடந்த 31ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, மருத்துவக் கவனவீனம் காரணமாகவே வயோதிபப் பெண் உயிரிழந்தார் என்றும் நெல்லியடிப் பொலிஸார் இது தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொண்டு அறிக்கையிட வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதிக்கு வழக்குத் தவணையிடப்பட்டுள்ளது. (ம-26)

## சீல் செய்த மதுபானத்தை வீட்டில் விற்றவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 3

சீல் செய்யப்பட்ட மதுபானத்தை வீட்டில் விற்றவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நாரந்தனை வடக்கு மத்திப் பகுதிக்கு சிவில் உடையில் சென்ற பொலிஸாருக்கு 180 மில்லிலீற்றர் கொள்ளளவு உடைய மதுபானத்தை நபரொருவர் விற்பனை செய்துள்ளார். இதன்போதே 54 வயதான அந்த நபரைப் பொலிஸார் கைதுசெய்தனர். அத்துடன் அவரிடமிருந்து 750 மில்லிலீற்றர் கொள்ளளவுடைய மதுபானப் போத்தல் ஒன்றும் கைப்பற்றப்பட்டது. இதனையடுத்து கைது செய்யப்பட்ட நபரை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-14-23)

## ம.உ.ஆணைக்குழு பிராந்தியப் பணிப்பாளர் அமெரிக்காவுக்கு பயணம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண மற்றும் வவுனியா பிராந்திய இணைப் பாளர் தங்கவேல் கனகராஜ் அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இன்று தொடக்கம் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை அமெரிக்காவின் வொஷிங்டன், நியூயோர்க், புளோரிடா, கலிபோர்னியா ஆகிய இடங்களில் நடைபெறவுள்ள செயலமர்வுகளில் கலந்துகொள்வதற்காகவே அவர் சென்றுள்ளார். (ஒ-14)

## வவுனியாவில் இளைஞர் மாயம்

வவுனியா, ஜூன் 3

வவுனியாவில் இளைஞர் ஒருவர் காணாமற் போயுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

குருமன்காடு பகுதியைச் சேர்ந்த கயேந்திரன் கிருத்திகன் என்ற இளைஞரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

இளைஞர் கடந்த 31 ஆம் திகதி அதிகாலை 4 மணியளவில் தனது வீட்டில் இருந்து வெளியே சென்றுள்ளார். அவர் வீடு திரும்பவில்லை. இதனால் குடும்பத்தினர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். எனினும் இளைஞர் இதுவரை வீடு திரும்பவில்லை என்று குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (ஒ-14-110)

## அடித்தள மீன்பிடியை கைவிடுவோர் பதிவு செய்க

மன்னார், ஜூன் 3

பேசாலையில் அடித்தள மீன்பிடியை கைவிட்டு ஏனைய மீன்பிடித்தொழில் செய்ய விரும்புவர்கள் சட்டபூர்வ அனுமதி பெறுவதற்காக பேசாலை மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

பேசாலை மீனவர்களில் ஒரு சிலர் அனுமதி வழங்கப்படாத தடைசெய்யப்பட்ட அடித்தள மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பில் கடற்றொழில் அமைச்சருடன் அண்மையில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போதே அடித்தள மீன்பிடியிலிருந்து மாற்றம் பெற்று ஏனைய மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இதற்கமைய தொழில் அனுமதியைப் பெறுவதற்கு மீனவர்கள் பேசாலை மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உடனடியாக தமது பதிவை மேற்கொள்ளுமாறு அறிவித்துள்ளனர்.

அத்துடன் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் தொழில் அனுமதிப் பத்திரத்துக்கான விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-14-60)

## மாட்டு வண்டி சவாரிப் போட்டி

கிளிநொச்சி, ஜூன் 3

கிளிநொச்சி வட்டக்கச்சி கலைவாணி சவாரி விடந்தையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி இடம்பெறவுள்ளது. அனைத்து மாவட்ட போட்டியாளர்களும் போட்டியிட முடியும். (ஒ-14-21)

## காரைநகர் வீதிக்கு பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

காரைநகர் - அந்தியேட்டி மடத்துக்கு செல்லும் வீதி அமரர் வாத்தியார் கிருஸ்ணபிள்ளை வீதி என பெயர்மாற்றம் செய்யப்படவுள்ளது. இதுதொடர்பான கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு பாலாவோடை பொது மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

காரைநகர் பிரதேசசபைத் தவிசாளர் ம. அப்புத்துரை தலைமையில் இடம்பெறவுள்ள கூட்டத்தில் பொதுமக்கள் அபிப்பிராயத்தின் முடிவுக்கிணங்க வீதிக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டு, பெயர்ப் பலகையும் பொருத்துதலும் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14-50)



## கைவசம் 33,500 தொன் பெற்றோல்

கொழும்பு, ஜூன் 3

நாட்டில் தற்போது சுமார் 33ஆயிரத்து 500 மெற்றிக்தொன் அளவு 92 ஒக்ரேன் பெற்றோல் கையிருப்பில் உள்ளது என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வெளியிட்ட தரவுகளின் அடிப்படையில் எரிசக்தி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அந்தத் தரவுகளின்படி 13ஆயிரத்து 67 மெற்றிக்தொன் 95 ஒக்ரேன் பெற்றோல், 18ஆயிரத்து 825 மெற்றிக்தொன் ஓட்டோ டீசல், 42 மெற்றிக் தொன் சுப்பர் டீசல் மற்றும் 386 மெற்றிக் தொன் ஜெட் எரிபொருள் ஆகியவை இருப்பில் உள்ளன. அதேநேரம் டீசல் ஏற்றி வந்த கப்பலில் இருந்து தற்போது டீசல் இறக்கப்பட்டு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகளும் தொடர்கின்றன. இரண்டு மாதங்களுக்கும் மேலாக இயங்காமல் இருந்து தற்போது இந்த வாரத் தொடக்கத்தில் மீண்டும் இந்த சுத்திகரிப்பு நிலையம் செயற்படத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபோகத்துக்கான உரம் வழங்க இந்தியப் பிரதமர் மோடி இணக்கம்

## ஜனாதிபதி கோத்தாபய தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 3**

**இந்தியக் கடன் திட்டத்தின்கீழ் சிறுபோகத்துக்குத் தேவையான உரத்தை விரைவில் வழங்குவதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இணங்கியுள்ளார் என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியக் கடனுதவியின்கீழ் கிடைக்கவுள்ள உரத்தொகையை 20 நாள்களுக்குள் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் உமா ஓயா மற்றும் மொரகஹகந்த செயற்றிட்டங்களை இவ்வருடம் நிறைவு செய்வதனூடாகப் பெரும்போகத்தில் சிறந்த பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியும். வெளிநாட்டு நிதியினூடாக முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்களை உரிய காலப்பகுதிக்குள் விரைவில் நிறைவுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் - என்றார். (ச-இ)



குடைபிடித்து பரீட்சை எழுதியமை

# மாணவர்களின் அவலத்தை நாமலால் ஏற்க முடியாதாம்

கொழும்பு, ஜூன் 3

பாடசாலை மாணவர்கள் கொட்டும் மழையில் குடைபிடித்து பரீட்சை எழுதிய செயற்பாட்டை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தனது ருவிற்றர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்தப் பதிவில் மேலும் உள்ளதாவது:

நாட்டின் பல பாடசாலைகளில் குறைந்த வசதிகள் உள்ளன ஆனால் முழுமையான கூரை இல்லாததை ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு தேசமாக எமது முன்னுரிமைகளை மறு மதிப்பீடு செய்து, நம் குழந்தைகளுக்கு சிறந்த எதிர்காலத்தை உறுதி செய்ய வேண்டும். கல்வி மட்டுமல்ல, அரசியல் மற்றும் சமூக சீர்திருத்தமும் எமக்குத் தேவை - என்று நாமல் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

# மழைவெள்ளத்துக்குள் பரீட்சை; உடன் விசாரணை மேற்கொள்க

## கல்வி அமைச்சு உத்தரவு

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையால் மழைநீர் மற்றும் வெள்ளநீர் உட்புகுந்த வகுப்பறைகளில் அமர்ந்து மாணவர்கள் பரீட்சை எழுதியமை தொடர்பில் உடன் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என கல்வி அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாாணவர்கள் குடைகளைப் பிடித்தவாறு மழைநீர் ஒழுகும் வகுப்பறைகளில் பரீட்சை எழுதிய ஒளிப்படங்கள் சமூகவலைத்தளத்தில் வெளியாகின. இதனையடுத்தே கல்வியமைச்சு குறித்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

பரீட்சை எழுவதற்கான வகுப்பறைத் தேர்வு, வகுப்பறைகளை மாற்றத் தவறியமை, சம்பவம் குறித்து தேர்வுத் துறைக்கு முறைப்பாடு தெரிவிக்காமை ஆகியன குறித்து உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பரீட்சைகள் திணைக்களத்துக்கு கல்வி அமைச்சு உத்தரவிட்டுள்ளது. இதேவேளை குறித்த இடரில் பல அசௌகரியங்களுக்கு மத்தியில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு நியாயமான தீர்வு வழங்கப்படவேண்டும் என ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# ஆயிஷா கொலைச் சந்தேகநபர் மீது பெண் ஒருவர் பாலியல் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 3

களுத்துறை அட்டுலுகம ஆயிஷா கொலை வழக்கில் கைதாகிய சந்தேகநபர் இந்தச் சம்பவத்துக்கு முன் அப்பகுதியிலுள்ள வேறொரு பெண்ணைத் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்துள்ளார் என தெரியவந்துள்ளது.

பாதிக்கப்பட்ட பெண் இது தொடர்பில் தெரிவித்ததாவது,

"முன்பள்ளி ஆசிரியராகப் பணிபுரியும் நான் எனது இரண்டு பிள்ளைகளுடன் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தவேளை வீட்டுக்குள் நுழைந்த குறித்த சந்தேகநபர் எனது வாயை அடைத்து துஷ்பிரயோகத்துக்குள்ளாக்க முயற்சித்தார். நான் கத்திக் குரலெழுப்பியதும் தப்பியோடிவிட்டார்.

இது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தும் பொலிஸார் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பின் ஆயிஷாவுக்கு நடந்த கொடூரமான குற்றத்தைத் தடுத்திருக்கலாம்" எனத் தெரிவித்தார். (ச-இ)



# மண்ணெண்ணெய்க்கு காத்திருந்த மக்களுக்கு சிற்றுண்டிப்பொதிகள்

முல்லைத்தீவு, ஜூன் 3

புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் மண்ணெண்ணெய்க்காக காத்திருந்த மக்களுக்கு சிற்றுண்டிப்பொதிகள் நேற்று வழங்கப்பட்டன.

சங்கத்துக்கு ஒரு மாதத்தின் பின்னர் நேற்றுமுன்தினம் இரவு 6 ஆயிரத்து 600 லீற்றர் மண்ணெண்ணெய் வந்தடைந்தது. அதனைப்பெற்றுக்கொள்வதற்காக இரவு 11 மணியிலிருந்து மக்கள் நீண்டவரிசையில் காத்திருந்து பெற்றுக்கொண்டனர். எனினும் நேற்று அதிகாலை 3 மணிக்கு மண்ணெண்ணெய் முடிவடைந்துள்ளது.

இதன்போது நீண்ட வரிசையில் காத்திருந்த மக்களுக்கு இளைஞர் குழுவொன்று சிற்றுண்டிப் பொதிகளை வழங்கியது. சிற்றுண்டிப் பொதிகளில் "நம்பிக்கையை இழக்காதீர்கள்" என்ற வாசகம் எழுதப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டது.

'எதிர்பார்ப்பு இல்லம்' என தம்மை அறிமுகப்படுத்திய இளைஞர்கள் குழு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தின் அனுமதியுடன் மக்களுக்கு சிற்றுண்டிகளை வழங்கியுள்ளனர். (ஒ-14-19)

# எரிபொருள் எங்கு செல்கின்றது என்பது எங்களுக்குத் தெரியவில்லை

## யாழ். மாவட்டச் செயலர் ஆதங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் பொருள்களைப் பதுக்கி வைத்து அதிக விலையில் விற்பனை செய்வோரிடம் கொள்வனவு செய்வதை பொதுமக்கள் தவிர்க்க வேண்டும் என யாழ்.மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு முழுவதும் பதுக்கி வைக்கப்பட்டுள்ள எரிபொருள் மற்றும் அதிக விலைக்கு அத்தியாவசியப் பொருள்கள், எரிபொருள் விற்பனை செய்தல் தொடர்பில் பாவனையாளர் அதிகார சபையினர் மற்றும் பொலிஸார் இணைந்து சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போதைய நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி சிலர் பொருள்களை அதிகளவில் கொள்வனவு செய்து பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்யக்கூடும். இந்த நிலையில் பொதுமக்கள் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடாது. அத்துடன் பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்பவர்களுக்கு பொதுமக்கள் உடந்தையாகவும் இருக்கக்கூடாது. அவ்வாறு அவர்களிடமிருந்து பொருள்களைக் கொள்வனவு செய்வதில் மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும். மேலும் யாழில் தற்போது தேவையான எரிபொருள் அதிக அளவில் கிடைக்கின்றது. எனினும் மேலதிகமாக கிடைக்கும் எரிபொருள் எங்கே செல்கின்றது என்பது தெரியவில்லை.

எனவே அதிக விலையில் பொருள்கள் விற்பனை செய்வோரிடம் கொள்வனவு செய்ய வேண்டாம். இதேவேளை மண்ணெண்ணெய் மற்றும் எரிவாயு விநியோகத்துக்கான பிரச்சினைக்கும் விரைவில் தீர்வு கிடைக்கும் -என்றார். (ஒ-14-26)

# நாட்டை மீட்க ஊதியத்தை டொலராக வழங்குங்கள்

## வெளிநாடுகளில் தொழில்புரிவோருக்கு அரசாங்கம் வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 3

வெளிநாடுகளில் தொழில்புரிவோர் தங்கள் ஊதியப் பணத்தை டொலராக வங்கிகள் ஊடாக அனுப்பி வைக்குமாறு அமைச்சர் மனுஷ நாணயக்கார வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் அரசாங்கத்தின் தலையீட்டில் தொழில்வாய்ப்புப் பெற்றுக்கொண்டவர்களுக்கான விமானப் பயணச்சீட்டு வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் நடைபெற்றது.

இதன்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியை தீர்க்கக் கடன் வழிகள் அன்றி வேறு வழிகளில் நாட்டுக்குள் டொலரைக் கொண்டுவரவேண்டிய அத்தியாவசியம் ஏற்பட்டுள்ளது.

அதன்படி வெளிநாடுகளில் தொழில்புரிவோர் தங்களால் முடிந்தவரை தங்கள் ஊதியத்தை டொலராக அனுப்ப முயற்சிக்கவேண்டும். அதிலும் வங்கிகள் ஊடாக அனுப்பினாலேயே நாட்டைக் கட்டியெழுப்ப உறுதுணையாக அமையும். ஆகவே இந்த இக்கட்டான நிலையில் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப உங்கள் பங்களிப்பை வழங்குங்கள் என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார மேலும் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றுக்காணியிலுள்ள மரங்கள் தறிக்கப்பட்டு களவாக விற்பனை

## நாவற்குழி மேற்கு மக்கள் விசனம்

கொடிகாமம், ஜூன் 3

நாவற்குழி மேற்கு ஜே/294 பகுதியில் ஆள்களின்றிய வெற்றுக்காணிகளில் உள்ள மரங்களை இனந்தெரியாதோர் தறித்து விறகுக்காக விற்பனை செய்கின்றனர் என அந்தப் பகுதி மக்களால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் கடந்த இரண்டு வாரங்களாக ஆள்கள் இல்லாத காணிகளில் உள்ள வேம்பு வாகை போன்ற மரங்களை களவாகத் தறித்து விறகாக விற்பனை செய்யப்படுகிறது.

நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் தமது வாழ்வாதார மரங்களை இரவிரவாகத் திருடி எமது பொருளாதார வளங்களை சூறையாடுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்தத் திருட்டுச் சம்பவம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராமமக்கள் மேலும் தெரிவித்தனர். (ச-159)



# பல்வேறு திருட்டுகளுடன் தொடர்புடையோர் கைது

கிளிநொச்சி, ஜூன் 3

பல்வேறு திருட்டுக்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றத்துக்காகவே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

புளியம்பொக்கணைநாகதம்பிரான் ஆலயத்துக்குச் சென்ற முதியவர்களிடம் இருந்து தங்க நகைகளை அபகரித்தமை, இரும்பகம் ஒன்றிலிருந்த பொருள்களைக் களவாடியமை, தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தை திருடியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள சந்தேக நபர்களிடம் இருந்து சில பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம)

# பயிற்சியாளர் விவரங்கள் அனுப்புமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 3

உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் தற்காலிக, சாதாரண, ஒப்பந்த மற்றும் தினக் கொடுப்பனவு பயிற்சியாளர்களின் விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகார இராஜாங்க அமைச்சின் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை தனிச்சிங்களத்தில் அனுப்பப்பட்ட கடிதத்தின் விவரங்களை ஆங்கிலத்தில் அனுப்பி வைக்குமாறு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தால் உள்ளூராட்சிச் சபைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. (ஒ-14,9)

# மரக்கறி விலை மேலும் எகிறும்

கொழும்பு, ஜூன் 3

நாட்டில் அடுத்த சில நாள்களில் மரக்கறிகளின் விலை மேலும் அதிகரிக்கும் சாத்தியம் உள்ளது என மரக்கறி வியாபாரிகள் எதிர்வுகூறியுள்ளனர்.

தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டால் பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் மொத்த விற்பனை யாளர்களுக்கு மரக்கறி வகைகள் கிடைக்கப்பெறாமையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## தென்மராட்சியில்

# மூன்று பாடசாலைகளுக்கு புதிய அதிபர்கள் நியமனம்


சாவகச்சேரி, ஜூன் 3

தென்மராட்சிக் கல்வி வலயத்திலுள்ள 3 பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை தரம் 1 ஐச் சேர்ந்த அதிபர்கள் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் புதிய அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலய அதிபர் ஆனந்த ஈஸ்வரி இராசரத்தினமும், வரணி மத்திய கல்லூரிக்கு கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை அதிபர் ஆ.தங்கவேலுவும், நாவற்குளி மகா வித்தியாலயத்துக்கு மீசாலை விக்னேஸ்வர மகா வித்தியாலய அதிபர் சு.சிவானந்தனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை புதிய நியமனங்களால் அதிபர் பதவி வெற்றிடமாகக் காணப்படும் மீசாலை விக்னேஸ்வர மகா வித்தியாலயத்துக்கு மாகாணக் கல்வித் திணைக்களமும், கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை மற்றும் மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம் ஆகியவற்றுக்கு தென்மராட்சி கல்வி வலயமும் விண்ணப்பங்களைக் கோரி நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. (ஒ-14-9)



# கல், மண் குவிக்கப்பட்டும் புனரமைப்பு நடக்கவில்லை

## மக்கள் ஆதங்கம்

சாவகச்சேரி, ஜூன் 3

கச்சாய் - கிளாலி வீதியை புனரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கனரக வாகனங்களின் பாவனையால் குறித்த வீதி குண்டும் குழியுமாக சேதமடைந்துள்ளது. இதனால் வீதியால் பயணிக்கும்போது பெரும் சிரமங்களை எதிர்கொள்கிறோம். கடந்த வருடம் குறித்த வீதியைத் தார்வீதியாகப் புனரமைப்பதற்கு பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் பின் திடீரெனப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டன. ஐந்து மாதங்களாகியும் புனரமைப்புப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவில்லை. இந்த வீதியின் புனரமைப்புப் பணிக்கென கற்கள், மணல் ஆகியவை வீதியில் குவிக்கப்பட்டுள்ளதால் வீதியால் பயணிப்போர் காயமடையும் நிலையும் ஏற்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது குறித்து கவனத்திலெடுத்து மழைகாலம் ஆரம்பிக்க முன் இடைநிறுத்தப்பட்ட பணிகளை மீண்டும் ஆரம்பித்து வீதியை புனரமைத்துத் தர வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-9)

# வலி. தென்மேற்குப் பிரதேசசபையின் சேதனப்பசளை வெளி மாவட்டங்களுக்கு

## ரூபா ஒன்றரை லட்சம் வருமானம்



யாழ்ப்பாணம், ஜூன் 3

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் திண்மக் கழிவகற்றல் பிரிவால் மேற்கொள்ளப்பட்டுவரும் சேதனப்பசளை உற்பத்திகள் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா போன்ற மாவட்டங்களுக்கு நேற்று ஏற்றுமதி செய்யப்பட்டன.

இதன்போது சுமார் ஒன்றரை லட்சத்துக்கும் அதிகமான வருமானம் பிரதேசசபைக்குக் கிடைத்துள்ளது என்று பிரதேசசபைத் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் சேதனப்பசளை விநியோகிக்கப்பட்ட வேளை அதிக வரவேற்பைப்பெற்றதை அடுத்தே வெளிமாவட்டங்களுக்கான விநியோகம் இடம்பெற்றது.

அத்துடன் கேள்வி கோரல் அதிகமாகக் காணப்படுவதால் எதிர்வரும் காலங்களில் சேதனப்பசளை உற்பத்தி இன்னும் அதிகரிக்கப்படவுள்ளது என்றும் தெரிவித்தார். (ஒ-14-125)

## கிளிநொச்சி கல்வி வலயத்தில்

# 5 வருடமாக பணியாளர் அட்டை விநியோகிக்கப்படாத நிலைமை!

கிளிநொச்சி கல்வி வலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஐந்து வருடங்களாக பணியாளர் அடையாள அட்டை வழங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக போக்குவரத்து மற்றும் இதர தேவைகளுக்கு பணியாளர் அடையாள அட்டை தவிர்க்க முடியாததாக இருக்கின்ற போதிலும், அதை வழங்குவதற்கு கல்வி வலயம் இழுத்தடிப்புச் செய்கின்றது என்று அவர்கள் மேலும் குற்றஞ்சாட்டுகின்றனர். 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் அனைவருக்கும் பணியாளர் அடையாள அட்டையை வழங்குவதற்காக ஒளிப்படங்கள் பெறப்பட்ட நிலையில், இன்றளவும் அந்த அடையாள அட்டைகள் வழங்கப்படவில்லை என்று பணியாளர்கள் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர். (ம-9)

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை

# வசிப்பிடங்களுக்கு அருகில் இடமாற்றுமாறு கோரிக்கை

யாழ்.மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தமது வசிப்பிடங்களுக்கு அருகில் உள்ள பிரிவுகளுக்கு இடமாற்றம் செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போதைய எரிபொருள் விலை அதிகரிப்பு, எரிபொருள் பெறுவதில் ஏற்படுகின்ற சிக்கல் என்பவற்றால் வசிப்பிடத்திலிருந்து கடமை பிரிவுக்குச் செல்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். இதேவேளை டெங்கு, கொரோனா மற்றும் உள்ளூராட்சி சபைகளால் அனுப்பப்படும் கட்டட விண்ணப்பங்கள் தொடர்பாக அந்தந்த இடங்களுக்குச் செல்வதற்கு பெருமளவு எரிபொருள் தேவைப்படுகின்றது.

எனினும் அவர்களுக்கு எரிபொருள் குறைந்தளவிலேயே வழங்கப்படுகின்றது. இதனைக் கருத்திற்கொண்டு தமது வசிப்பிடத்துக்கு அருகில் உள்ள பொதுச் சுகாதாரப் பிரிவுக்கு இடமாற்றம் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-14-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மாறவேண்டும் கட்டமைப்பு!

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை நிறைவுக்கு வந்திருக்கிறது. மாணவர்களின் திறமையை இந்தப் பரீட்சை மதிப்பீடு செய்ததோ இல்லையோ இலங்கையின் கல்விக் கட்டமைப்பின் வினைத்திறனை நன்றாகவே மதிப்பீடு செய்திருக்கின்றது. பாடசாலைக் கட்டடங்கள் முதல் கற்றல், கற்பித்தல் பொறிமுறைகள் வரை அத்தனையும் மறுமதிப்பீட்டுக்கும் பகுப்பாய்வுக்கும் உட்படுத்தவேண்டும் என்ற தேவையை, கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை வெகுவாகவே உணர்த்தியிருக்கின்றது.

ஏற்கனவே பெரும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இம்முறை பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களை இன்னொரு புறத்தில் சீரற்ற காலநிலையும் சொல்லொணாத்துன்பத்தில் ஆழ்த்தியுள்ளது. ஒருசில பரீட்சை நிலையங்களில் கொட்டும் மழைக்குள் மாணவர்கள் குடைகளைப் பிடித்தவண்ணம் பரீட்சைகளை எழுதிய அவலச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. 21ஆவது திருத்தத்தைப் பற்றியும் அரசியல் கட்டமைப்பு மாற்றங்கள் பற்றியும் அடிக்கொரு தடவை வலியுறுத்திவரும் அரசியல் கட்சிகள் உண்மையில் மக்களுக்குச் செய்ய வேண்டிய அவசியமான பணிகள் தொடர்பில் கிஞ்சித்தும் கவனம் செலுத்துவதில்லை.

கல்விக் கட்டமைப்புத்தான் நாட்டின் முதுகெலும்பு. அந்தக் கட்டமைப்புச் சீர்குலைந்துவிட்டால் பின்பு எதைச்சாதித்தும் என்னதான் பயன்? பல பில்லியன்களை முதலிட்டு அதிவேக நெடுஞ்சாலைகளையும், தாமரைக் கோபுரங்களையும் நிர்மாணிப்பதற்கு முன்னர் எதிர்காலத் தலைவர்களை உருவாக்கும் பாடசாலைக் கட்டடங்கள் உறுதித்தன்மையுடன் இருக்கின்றனவா என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டுமல்லவா? பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் மேற்கொள்ளும் முதலீடுகளும் அபிவிருத்திகளும்தான் நிலைபேறானவை. அவற்றையடுத்து, 'குடிப்பது கூழ், கொப்பளிப்பது பன்னீர்' என்பதுபோல மேற்கொள்ளப்படும் 'கடன்' முதலீடுகளால் இலங்கையின் எதிர்காலத்தை உறுதிப்படுத்த முடியாது என்பதில் என்ன சந்தேகம்.

நாட்டிலுள்ள பாடசாலைக் கட்டடங்களைப் போன்று, இலங்கையின் கல்விக் கட்டமைப்பும் மிகப் பழைமையானது. ஆதலால், இந்தக் கல்விக் கொள்கைகள் மறுசீரமைக்கப்பட்டு புதுமை புகுத்தப்படவேண்டும். பாடத்திட்டங்கள் நவீனமயப்படுத்தப்படவேண்டும். தற்போது காலத்தேவையும் அதுவேதான்.

ஜப்பான் போன்ற வளர்முக நாடுகளில் மாணவர்களின் சிறு பராயத்திலேயே துறைசார் கல்வி அவர்களுக்குப் புகட்டப்படுகின்றது. ஒரு மாணவன் அல்லது மாணவி குறிப்பிட்ட ஒரு துறையைத் தேர்ந்தெடுத்த பின்னர் அந்தத்துறையில் அவர்கள் புடமிடப்பட்டு வளர்க்கப்படுகின்றனர். ஆனால், இலங்கையில்...? மருத்துவம், பொறியியல், விவசாயம், தொழில்நுட்பம், வர்த்தகம் என எந்தத் துறையில் ஒரு மாணவர் ஆர்வமுடையவராக இருந்தாலும், அனைவருக்கும் பொத்தாம்பொதுவான கல்வித் திட்டங்களே இலங்கையில் உள்ளன.

இலங்கையில் உயர்கல்வி அல்லது பட்டப்படிப்பு என்பது 'ஓர் அரச வேலை' என்பதை இலக்காக வைத்தே மேற்கொள்ளப்படுகின்றது. எந்தத் துறையில் கல்விகற்றாலும் ஓர் அரச வேலையைக் கொடுத்துவிட்டால் அத்துடன் அரசாங்கத்தின் கடமை முடிந்துவிடுகின்ற – ஓர் அரச வேலையைப் பெற்றுவிட்டால் 15 ஆண்டுகால கல்வியின் 'உச்ச அடைவை' அடைந்துவிட்டோம் என்று கருதுகின்ற போக்கைத்தான் நாம் காண்கின்றோம். இதனால்தான் விவசாயத்துறையில் பட்டம் பெற்றவர் வங்கியில் காசாளராகவும், இசைத்துறையில் பட்டம் பெற்றவர் சமுர்த்தி அலுவலராகவும் நியமிக்கப்படுகின்ற 'முரண்' நிலைகளை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

ஆக, 21ஆவது திருத்தம் மறுசீரமைக்கப்படுவதற்கு முன்னர் அவசியமாக – அவசரமாக மறுசீரமைக்கப்பட வேண்டிய கல்விக் கட்டமைப்பைப் பற்றி இனியாவது அதிகாரிகள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

நாளொரு நல்வார்த்தை

"அன்பு அருளைத் தரும்; ஆற்றல் பொருளைத்தரும். அன்புள்ள இடத்தில்தான் ஆண்டவன் இருக்கிறார்" -காந்திஜீ



# முழுமையான உதவிகளை இலங்கைக்கு வழங்குங்கள்

## வெளிநாட்டுத் தூதுவர்களிடம் ஜி.எல்.பீரிஸ் கோரிக்கை

**கொழும்பு, ஜூன் 3**

**இலங்கையின் பொருளாதாரப் பின்னடைவைச் சரிசெய்வதற்காக, முழுமையான பங்களிப்பை இலங்கைக்கு வழங்க முன்வரவேண்டும் என்று வெளிநாட்டுத் தூதுவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.**

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு நேற்று அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ். கொழும்பை தளமாகக் கொண்ட தூதுவர்களுக்கு இன்று (நேற்று) வெளிவிவகார அமைச்சில் வைத்து விளக்கமளித்தார்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தனது உரையின்போது அரசாங்கம் எதிர்கொள்ளும், இலங்கையில் நிலவும் பொருளாதார நிலைமை மற்றும் எரிபொருள், எரிவாயு, அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் மற்றும் மின்வெட்டு போன்ற அழுத்தமான பிரச்சினைகள் உள்ளடக்கிய சவால்களை சுட்டிக்காட்டினார். இது தொடர்பான நிலைமையை நிவர்த்திசெய்வதற்கு அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகளை விரிவாக எடுத்துரைத்த அமைச்சர், தேவைப்படும் நேரத்தில் தமது முழுமையான உதவிகளை வழங்குமாறு தூதுவர்களைக் கேட்டுக்கொண்டார். அவர் தனது உரையில், 21ஆவது திருத்தத்தைப் பற்றியும் குறிப்பிட்டதுடன், இந்தத் திருத்த வரைவின் சில முக்கிய அம்சங்களையும் சுட்டிக்காட்டினார் - என்றுள்ளது. (ம)

## சாதாரணதரப் பரீட்சையின்போது

# சீரான போக்குவரத்தில்லை மாணவர்களுக்குச் சிரமம்!

மன்னார், ஜூன் 3

நடந்து முடிந்த கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்காலத்தில், சீரான போக்குவரத்து இல்லாததால் தாம் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது என்று மன்னார் மாவட்ட பரீட்சாத்தி களும் ஆசிரியர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

பேசாலைப் பகுதியிலிருந்து தாராபுரம் மற்றும் மன்னாருக்கு பரீட்சைக் கடமைக்காகவும் பரீட்சை எழுதுவதற்காகவும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் செல்வதில் பெரும் போக்குவரத்து நெருக்கடி நிலவியது.


பரீட்சையின் முதல் நாளும், இறுதி நாளும் தலைமன்னார் - மன்னார் பேருந்துச் சேவை சரியான முறையில் நடைபெறாத காரணத்தால் பேசாலைப் பகுதியிலிருந்து பரீட்சை மண்டபங்களுக்குச் செல்லவேண்டியவர்கள் பல சிரமத்தின் மத்தியில் செல்ல வேண்டியிருந்தது - என்றனர். (ம-60)


நாளை 04.06.2022 சனிக்கிழமை வைகாசி 21
சுபநேரம் : 02.52 - 04.22
ராகுகாலம்: 08.52 - 10.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டையின் விலை கோழிக்கு
தெரிந்தால் இப்படி தான் நடந்து போகும்




RT Sendhuran

#பெற்றோல் விலை கூட்டும்போது கூட கல்லு மாரி இருந்த மனுசே!
#சரக்கு விலை கூட்டினதும் கலங்கிட்டே!!!



Piratheepan Gnanasekaram
22 May at 21:26

இது வீடு, இதுக்குள்ள கொஞ்ச பிரச்சனை இருக்கு
இது வேலை இதுக்குள்ள கொஞ்ச பிரச்சனை இருக்கு
இது நாடு இதுக்குள்ளயும் கொஞ்ச பிரச்சனை இருக்கு..
அதான் இல்லை, #பிரச்சனைக்குள்ள தான் நாடே இருக்கு



# படகு மூலம் மூவர் தமிழகத்தில் தஞ்சம்

கொழும்பைச் சேர்ந்த 3 பேர் தமிழகத்துக்கு கடந்த செவ்வாய்க் கிழமை அகதிகளாகப் புலம்பெயர்ந் துள்ளனர். கொழும்பைச் சேர்ந்த தாய், மகன் மற்றும் மன்னார் சிலாவத் துறையைச் சேர்ந்த ஒருவர் ஆகிய மூவரே தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர். மூவரும் மன்னார் பேசாலை கடற்கரையிலிருந்து படகு மூலம் தனுஷ் கோடிக்கு அருகிலுள்ள கோதண்டராமர் கடற்கரைப் பகுதியை சென்றடைந்தனர். அவர்களை தமிழக கடலோர காவற்படையினர் மீட்டு விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி முதல் இதுவரை 83 பேர் தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)




## எரிபொருள் நிலையத் தாக்குதல்; சந்தேகநபருக்கு விளக்கமறியல்

முல்லைத்தீவு, ஜூன் 3

புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 31 ஆம் திகதி குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பொலிஸாரின் பாதுகாப்புடன் எரிபொருள் வழங்கப்பட்டது.

அங்கு எரிபொருள் பெற வந்த நபரொருவர் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர், பணியாளர்கள் மீது தாக்குதல் நடத்த முற்பட்டார். அத்துடன் எரிபொருள் நிலைய அலுவலகத்தின் கண்ணாடி மீதும் தாக்குதல் நடத்தினார். இதன்போதே சந்தேகநபர் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். நேற்றுமுன்தினம் பொலிஸார் சந்தேகநபரை மாங்குளம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். அங்கு அவர் நீதிபதி மற்றும் நீதிமன்றத்தை அவமதித்து பேசியுள்ளார். இதனையடுத்து சந்தேகநபரை எதிர்வரும் 7 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

(ஓ-14,19)

### முகநூலிலிருந்து...

Kajenderan Balasingam

## காஸ் வழங்கலும் கடுமையான கட்டுப்பாடுகளும்

நேற்றுமுன்தினம் முதல் யாழ்ப்பாணத்தில் கிராமஅலுவலரூடாகப் பதிவு செய்தவர்களுக்கு காஸ் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்று வருகின்றது. இருக்கின்ற நெருக்கடி நிலையில் இதனைவிட மாற்றுவழியேதும் இல்லை.

ஆனால் பதிவு செய்தவர்களில் குறித்த திகதிக்கு அழைக்கப்பட்டவர்கள் அவ்விடத்தில் இல்லையென்றால் அடுத்தவருக்கு (ஒழுங்கின் அடிப்படையில்) வழங்கப்படுவதாக அறிய முடிகிறது.

பதிவு செய்தவர்கள் அனைவரும் அழைத்தவுடன் வரும் தயார் நிலையில் இருக்கமாட்டார்கள்.

மருத்துவமனை சென்றிருப்பார்கள். வெளிமாவட்டங்களுக்கோ தூர பிரதேசங்களுக்கோ வேலைக்கு சென்றிருப்பார்கள். அழைத்தவுடன் வருவதற்கு விடுப்பெடுக்க முடியாத பணியில் ஈடுபட்டிருப்பார்கள். வீட்டில் உள்ள கைக்குழந்தையை உடனடியாக விட்டு விட்டு வரமுடியாத தாயாக இருப்பார்கள்.

எனவே இவ்வாறானவர்கள் பெற்றுக்கொள்ள வசதியாக மாலைவரையாவது காத்திருப்பது அவசியமானதாகும். சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுப்பார்களா??

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனது சில்லறை விற்பனையாளர் குடும்பத்துடன் 'எங்கள் குடும்பத்திலிருந்து உங்கள் குடும்பத்திற்கு' திட்டம் மூலம் புதுவருட அரவணைப்பை வெளிப்படுத்தும் Clogard



சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு கொண்டாட்டங்கள் யாவும் அனைத்து இன மக்களையும் ஒன்றிணைக்கிறது. Clogard யின் 'Ape Pawulen Obe Pawulata' (எங்கள் குடும்பத்திலிருந்து உங்கள் குடும்பத்திற்கு) பிரசாரமானது, Clogard அதன் பங்குதாரர்களிடையே கொண்டிருக்கும் பொறுப்புணர்வை வெளிப்படுத்துகிறது. Clogard ஆனது தனது பங்குதாரர்களின் வாழ்வில் பிரதியுபகாரமாகவும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகவும் எடுக்கப்பட்ட பல நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும். ஒற்றுமையை ஊக்குவிக்கும் ஒரு தரக்குறியீடாக, Clogard அதன் சில்லறை விற்பனையாளர் வலையமைப்பிற்குள், குடும்பமாக வர்த்தகத்தில் ஈடுபடும் ஒரு சில சிறிய குடும்பங்களை அடையாளம் கண்டு, புதுவருட இனிப்புகள், குழந்தைகளுக்கான காகிதாதிகள், வீட்டுக்கு அவசியமான பொருட்கள், வாய்ச் சுகாதார பராமரிப்பு பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களைக் கொண்ட பொதிகளை பரிசளித்துள்ளது. Clogard நிறுவனத்தின் சிரேஷ்ட வர்த்தக நாம முகாமையாளர் திருமதி ரமிலா பென்னாண்டோ இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், "இந்த சவாலான காலகட்டத்தில், குடும்பங்களை ஒன்றிணைக்கும் எமது வர்த்தகநாம நோக்கத்துடன் ஒரு படி முன்வைத்து அவர்களுடன் ஒன்றாக நிற்கும் வகையில், 'Ape Pawulen Obe Pawulata' திட்டம் கைகோர்த்துள்ளது. எமது சில்லறை விற்பனையாளர்கள் எமது Clogard குடும்பத்தின் ஒரு பெரிய அங்கமாக இருப்பதால் அவர்கள் தொடர்பில் எமக்கு உள்ள பொறுப்பையும் நாம் தொடர்ந்தும் மனதில் கொண்டுள்ளோம்.

புதுவருடமானது, குடும்பம் மற்றும் நண்பர்கள் ஒன்று கூடி பாரம்பரியங்கள் மற்றும் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்கும் ஒரு கொண்டாட்டமாக நீண்ட காலமாக இருந்து வருகிறது. இலங்கையில் பல சமூகங்களால் கொண்டாடப்படும் இந்த பண்டிகைக் காலமானது முழு தேசத்தின் ஒற்றுமையையும் பிரதிபலிக்கிறது.

எவ்வாறாயினும், தற்போது அனைத்து இலங்கையர்களும் எதிர்கொண்டுள்ள முன்னொருபோதும் இல்லாத சவால்களுடன் இந்த வருட புதுவருடமானது வேறுபட்ட அடையாளத்தைப் பெற்றுள்ளது. முற்றுமுழுதானதொரு இலங்கை வர்த்தக நாமம் எனும் வகையில், ஊடழுபயசன ஆனது இந்த காலத்தின் தன்மையை நன்கு புரிந்துகொண்டு, இந்த சவாலான காலத்தை, ஒற்றுமையை ஊக்குவிப்பதற்கும், பிணைப்புகளை வலுப்படுத்துவதற்கும், உண்மையான இலங்கையர்களுக்குள்ள உணர்வுகளை பேணி, பாதுகாப்பதிலும் கவனம் செலுத்தும் முயற்சிகளில் பங்களித்து ஆதரவளிப்பதில், அதற்கு அவசியமாகவுள்ள இவ்வேளையை பயன்படுத்த முன்வந்துள்ளது.

'Ape Pawulen Obe Pawulata' ஆனது, எமது கொண்டாட்டங்கள் மற்றும் மங்களகரமான நேரத்தை கொண்டாடுவதை ஊக்குவிக்கும் ஒரு நிகழ்வாக மாத்திரமல்லாது, இந்த சவாலான காலங்களில் அனைத்து இலங்கையர்களின் மன உறுதியையும் ஊக்குவிப்பதாகவும் அமைந்துள்ளது. ஊடழுபயசன ஆனது, மக்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு, உண்மையான இலங்கையர் என்ற க்ளோகார்டின் நெறிமுறைகளை உயிர்ப்பித்து, ஒளிமயமான நாளைக்கான இதமான மனதையும், நம்பிக்கை மற்றும் ஒற்றுமையின் உணர்வையும் வழங்குவதில் மகழ்ச்சியடைகிறது. அத்துடன் இச்செய்தியானது,சிறந்த விடயங்கள் தலைமுறை தலைமுறையாக கொண்டு செல்லப்பட வேண்டும் எனும் வர்த்தகநாமத்தின் நம்பிக்கையை வெளிப்படுத்தும் வகையில் பிரத்தியேக வீடியோக்களாக டிஜிட்டல் தளங்களில் வெளியிடப்பட்டன. ஊடழுபயசன எவ்வாறு புதுவருடத்தின் உணர்வை விரிவுபடுத்தி, தனது சில்லறை விற்பனையாளர் குடும்பத்துடன் உணர்வுகளை பகிர்ந்து கொள்ளும் என்பதை அந்த வீடியோக்கள் விளக்கின.

ஜா-எல வெலிகம்பிட்டியவைச் சேர்ந்த சில்லறை விற்பனையாளர் ஒருவர், 'Ape Pawulen Obe Pawulata' மூலம் தாம் பெற்ற பரிசுகள் குறித்து கருத்துத் தெரிவிக்கையில், "புது வருடம் ஒரு மகிழ்ச்சியான நேரமாகும். அது ஒன்றாக இருக்க வேண்டிய நேரமுமாகும். இருப்பினும், தற்போது நம் அனைவருக்கும் இது ஒரு கடினமான நேரமாக உள்ளது. எனவே Clogard மேலும் ஒரு படி முன் சென்று, இவ்வருடத்தில் எமக்கு இந்த அற்புதமான பரிசுகளை வழங்கியதில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்." என்றார்.

தனது பங்குதாரர்களுடனான ஒரு தசாப்தத்திற்கும் மேலான நெருங்கிய உறவுகளை கொண்டுள்ளதன் அடிப்படையில் ஊடழுபயசன வர்த்தகநாமத்தின், 'Ape Pawulen Obe Pawulata' பிரசாரமானது, தரக்குறியீட்டின் பங்குதாரர் வலையமைப்பின் ஆதரவையும் பாராட்டையும் பிரதிபலிக்கிறது. பங்குதாரர்கள் எந்தவொரு சவாலையும் எதிர்கொண்ட போதிலும், Clogard ஆனது, அவர்களுக்கு பக்கபலமாக நின்று அவர்களுடன் தொடர்ந்தும் பயணிக்கும் எனும் உண்மையை இந்த பிரசாரமானது வெளிப்படுத்துகிறது.

## அவதூறு வழக்கு:

# நடிகர் ஜொனி டீப்புக்கு ஆதரவாகத் தீர்ப்பு

வொஷிங்டன், ஜுன் 3

தனது முன்னாள் மனைவி ஆம்பர் ஹெர்ட் மீது பிரபல நடிகர் ஜொனி டீப் தொடர்ந்த அவதூறு வழக்கில் ஜொனி டீப்புக்கு ஆதரவாகத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

'பைரேட்ஸ் ஆஃப் தி கரீபியன்' படம் மூலம் பிரபலமான ஹொலிவுட் நடிகர் ஜொனி டீப். தன்னைவிட 25 வயது குறைவான அமெரிக்க நடிகை ஆம்பர் ஹெர்ட் மீது காதல் வயப்பட்டு 2015ஆம் ஆண்டு திருமணம் செய்துகொண்டார். ஆனால், இவர்களின் திருமண வாழ்க்கை வெகுநாள்கள் நீடிக்கவில்லை. 2016 ஆம் ஆண்டு ஆம்பர் ஹெர்ட் , ஜொனி டீப் உடன் இணைந்து வாழ முடியாத காரணத்தால் இருவரும் பரஸ்பர விவாகரத்துப் பெற்றனர்.



அதேவேளை தனது முன்னாள் கணவரான ஜொனி டீப் தன்னை பாலியல் ரீதியில் துன்புறுத்தியதாகவும், குடும்ப வன்முறைக்கு உள்ளானதாகவும் வழக்குத் தொடர்ந்த ஆம்பர் தனக்கு நஷ்டஈடாக 776 கோடி ரூபாய் இழப்பீடு வழங்கக்கோரி வழக்குத் தொடர்ந்தார்.

இந்தக் குற்றச்சாட்டை மறுத்த ஜொனி டீப் தனது முன்னாள் மனைவி ஆம்பர் மீது மானநஷ்டஈடு வழக்குத் தொடர்ந்தார்.

தனது பெயர், புகழுக்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் ஆம்பர் செயற்படுவதாக இதற்கு இழப்பீடாக 380 கோடி ரூபா நஷ்ட ஈடு வழங்கக் கோரியும் ஆம்பர் மீது ஜொனி டீப் வழக்குத் தொடர்ந்தார்.

இந்த வழக்கின் இறுதிக் கட்ட விசாரணை கடந்த 2 மாதங்களாக நடைபெற்று வந்தது. பல்வேறு சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டன. இந்த இறுதிகட்ட விசாரணை உலக அளவில் பேசுபொருளானது.

இந்த நிலையில், இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று வெளியானது.

அதன்படி, ஜொனி டீப்புக்கு எதிராக அவதூறு பரப்பும் நோக்கத்துடன் ஆம்பர் செயற்பட்டது உறுதியாகியுள்ளது என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அத்தோடு ஜொனி மீது ஆம்பர் தெரிவித்த பாலியல் குற்றச்சாட்டுகளும் போலியானவை என நீதிமன்றம் தெரிவித்தது.

இதனடிப்படையில் அவதூறு பரப்பும் வகையில் பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்தற்காக ஆம்பர் தனது முன்னாள் கணவர் ஜொனிக்கு இழப்பீடாக 78 கோடி ரூபாவும் அபராதமாக 38 கோடி ரூபாவுமாக மொத்தம் 116 கோடி ரூபா வழங்க வேண்டும் என நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இது ஜொனிக்குக் கிடைத்த வெற்றியாக கருதப்படுகிறது. ஜொனிக்கு ஆதரவாக தீர்ப்புகள் வெளியான நிலையில் அவரது ரசிகர்கள் சமூகவலைதளங்களில் உற்சாகக் கருத்துக்களைப் பதிவிட்டு வருகின்றனர். (ச-இ)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** திட்டமிட்டுச் செயற்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். எதிர்பாராத செலவு உண்டாக வாய்ப்புண்டு துணிச்சலுடன் செயற்பட்டு சில பிரச்சினைகளுக்கு முடிவு கட்டுவீர்கள்.

**இடபம்:** உடலில் பாதிப்பு தோன்றும். உணர்ச்சிவசப்பட வேண்டாம். பேச்சில் கவனம் தேவை. உங்களைக் கோபப் படுத்தும் வகையில் சிலர் செயற்படலாம். அமைதி காப்பது நன்மை தரும்.

**மிதுனம்:** மனக்குழப்பத்துக்கு இடமளிக்க வேண்டாம். திட்டமிட்டு செயற்பட்டால் வெற்றி உண்டு. முயற்சி நிறைவேறும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் கவனம் செல்லும். நவீன பொருட்களை வாங்குவீர்கள். எதிர்பார்ப்பு நிறை வேறும். ஆடம்பர செலவால் பணம் கரையும். யோசித்து செயற்படவும்.

**சிம்மம்:** வராமல் இருந்த பணம் வசூலாகும். புதிதாக சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும். எதிர்பார்ப்பு இன்று நிறைவேறும். நண்பர்களால் உங்கள் தேவைகளை அடைவீர்கள்.

**கன்னி:** வேலைவாய்ப்பிற்காக காத்திருப்பவருக்கு நல்ல தகவல் வரும். தொழில் முயற்சி வெற்றி பெறும். வியாபாரத்தில் புதிய அணுகுமுறையைக் கடைபிடிப்பீர்கள். வருமானம் கூடும்.

**துலாம்:** எதிர்பார்த்த நன்மை கிடைக்காமல் போகும். உங்கள் தேவையை நிறைவேற்றிக் கொள்வீர்கள். உங்கள் முயற்சி இழுபறியாகும். எச்சரிக்கை தேவை. குழப்பம் ஏற்படும்.

**விருச்சிகம்:** சங்கடப்படுத்தும் வகையில் சில விடயங்கள் நடக்கும். புதிய முயற்சி எதிலும் ஈடுபாட வேண்டாம். உறவினர்களிடம் மோதல் உண்டாகும். பிரச்சினை உருவாகும்.

**தனுசு:** நட்புகளின் வழியே நன்மை காண்பீர்கள். குடும்பத்தில் இருந்த நெருக்கடி விலகும். பணவரவு உண்டு. குடும்பத்தினரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** உடலில் இருந்த சங்கடம் விலகி உற்சாகமுடன் செயற்படுவீர்கள். செல்வாக்கு கூடும். எதிரிகளுக்கு பாடம் புகட்டுவீர்கள். நினைத்ததை அடைவீர்கள். செல்வாக்கு மேம்படும்.

**கும்பம்:** வரவை விட செலவு அதிகரிக்கும். உங்கள் செயல்களில் தடைகளும் தாமதமும் ஏற்படும். பிள்ளைகளின் வழியே சங்கடத்துக்கு ஆளாவீர்கள். உழைப்புக்கு மதிப்பு ஏற்படும்.

**மீனம்:** எதிர்பாராத வேலையால் நெருக்கடிக்கு ஆளாவீர்கள். குடும்பத்தினரால் சங்கடத்தை அடைவீர்கள். எதிர்பார்த்தவற்றில் உங்களுக்கு சாதகமான நிலை இல்லாமல் போகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப்புலவர் சங்கம் இணுவிலுக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 3
அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் தலைமையகம் இணுவிலுக்கு இடமாற்றப்பட்டுள்ளது.
இதற்கமைய இல.610 கே.கே.எஸ் வீதி, இணுவில் என்ற முகவரியூடாக அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்துடனான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்று அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் தெரிவித்துள்ளார். (ஒ-14)


குப்பிளான் கற்கரைப்பிள்ளையார் துணை
28 வது ஆண்டு நிறைவுப்பிரார்த்தனை

தவப்பேறு 11 – 01 – 1960



சிவப்பேறு 03 – 06 – 1994

அமரர்
திருமதி ஞானலக்ஷ்மி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
( B.A (Hons) Eng Trd - ஆசிரியர் )
இமைப்பொழுதும் எம் நெஞ்சில்
இறவா அன்பே - ஞானா
நீள நினைந்து பிரார்த்திக்கின்றோம்

246, 4A கோவில் வீதி, நல்லூர்
ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (கணவன்)
இளைப்பாறிய பிரதிக்கல்விப் பணிப்பாளர்



முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

கடந்த 11.06.2021 வெள்ளிக் கிழமை இறைபதம் அடைந்த எங்கள் அன்பு தெய்வம்
**விவேகானந்தன் ஜீவராணி**



புன்னகைக்கும் உங்கள்
- முகம் எங்களுக்கு
தினமும் வந்து
- போகிறதம்மா - அது
உண்மையில்லை என்று
- நினைக்கும் பொழுது
நாங்கள் கலங்கித்
- தவிக்கின்றோம் - அம்மா

மலர்வு 01.11.1958
உதிர்வு 11.06.2021

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மீசாலை கிழக்கு, மீசாலை
பிரிவில் துயருறும்.
குடும்பத்தினர்
077 415 7189



மரண அறிவித்தல்

பிறப்பு 20 - 10 - 1947



இறப்பு 02 - 06 - 2022

**அந்தோனிப்பிள்ளை றோக்நாதர் (றோக்)**

இல.30 இராஜேந்திரா வீதி குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை றோக்நாதர் (றோக்) அவர்கள் நேற்று (02.06.2022) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை மரியமுத்து தம்பதியரின் அன்பு மகனும், யோன் ஒவ் ஆர்க் அவர்களின் அன்புக் கணவரும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் இன்று (03.06.2022) வெள்ளிக்கிழமை பி.ப 03.00 மணியளவில் யாழ்.மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

30, ராஜேந்திரா வீதி, குருநகர்.
தகவல்: குடும்பத்தினர்
மகன் - 077 101 5642


இந்தியக் கடனில்

# மருந்துகளை விரைந்து கொள்வனவு செய்யுங்கள்

## 'கோப்' குழு உத்தரவு

கொழும்பு, ஜூன் 3
இந்தியக் கடனைப் பயன்படுத்தி, நாட்டில் தற்போது நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்ய உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று துறைசார்ந்த அதிகாரிகளுக்கு கோப் குழு உத்தரவிட்டுள்ளது.
இலங்கை அரச மருந்தகங்கள் கூட்டுத்தாபனத் தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் கடந்த செவ்வாய்க்கிழமை கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டனர். இதன்போதே இந்த உத்தரவை கோப் குழு விடுத்தது. அத்தியாவசிய மருந்துப் பொருள்களின் பற்றாக்குறை பொதுமக்களின் வாழ்க்கையுடன் தொடர்புபட்ட பிரச்சினை என்பதால் தற்போதைய நெருக்கடி நிலைமையை விரைவில் தீர்த்து, அத்தியாவசிய மருந்துகளைப் பொதுமக்களுக்கு வழங்கவேண்டியது அவசியமாகும் என்று கோப் குழு சுட்டிக்காட்டியது.
இது தொடர்பான நடவடிக்கையை எடுத்து வருவதாகவும் தற்பொழுது அது இறுதிக்கட்டத்தில் இருப்பதாகவும் துறைசார் அதிகாரிகள் தெரிவித்தனர்.
(ம)

### உயர்தரப்...

கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட விசேட ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை எதிர்வரும் ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களுக்கு இடையே நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
2022ஆம்ஆண்டுக்கான மூன்றாம் தவணை டிசெம்பர் மாதம் 23ஆம் திகதிவரை நடைபெறுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன. அந்தக் காலப்பகுதிக்குள் 2022 ஆம் ஆண்டுக்கான பாடத்திட்டத்தை முழுமைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம். அனைத்து தரப்புகளுடனும் பேச்சு நடத்தி இதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். அதேநேரம் பாடசாலைச் சீருடை விநியோகம் தொடர்பாகப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்றார்.
அதேவேளை, 2021ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையின் அனைத்துச் செயன்முறைப் பரீட்சைகளும் எதிர்வரும் ஜூலை மாதம் 10ஆம் திகதி நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.
(அ-எ-44)

### இறக்குமதி...

பட்டமையே விலையேற்றத்துக்குக் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
வைன், விஸ்கி, ரம், ஜின், வொட்கா ஆகிய இறக்குமதி மதுபானங்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.
அதேவேளை- பெறுமதி சேர் வரி அதிகரிப்பு காரணமாக நேற்றுமுன்தினம் முதல் நடைமுறையாகும் வகையில் உள்ளூர் மதுபான போத்தல் ஒன்றின் விலை 520 ரூபாவால் அதிகரிக்கப்பட்டதோடு, பியர் போத்தல் ஒன்றின் விலை 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

### மக்கள்...

சிங்சவின் நிர்வாகமும் வேண்டாம். மக்களால் விரும்பப்பட்ட தலைவர்கள் ஆட்சி செய்ய வேண்டும் என்பதே மக்கள் சார்பாக எமது கோரிக்கையாகும்.
இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.
மட்டக்களப்பில் நேற்று முன்னெடுத்த பரப்புரை நடவடிக்கையின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தெருக்களில் கால்நடையாகச் சென்று "வனப்புமிக்க தேசம் அழகான வாழ்க்கை மற்றும் அன்புமிக்க மக்களே" என விளிக்கும் இரு கையேடுகள் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.
அங்கு கருத்துத் தெரிவித்த சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்ததாவது:-
கோத்தாபய மற்றும் ரணில் தலைமையிலான நிர்வாகத்தால் இந்த நாட்டு மக்கள் அனுபவிக்கும் பிரச்சினைகளை ஒருபோதும் தீர்த்துவிட முடியாது. அதனால் இவர்கள் ஒதுங்கிக்கொண்டு மக்களாட்சியை நிறுவுவதற்கு இடம்கொடுக்கவேண்டும். மக்களால் விரும்பப்பட்ட தலைவர்கள் ஆட்சி செய்ய வேண்டும் என்பதே மக்கள் சார்பாக எமது கோரிக்கையாகும்.
இவர்கள் நிர்வாகப் பொறுப்பில் இருக்கும் வரை இந்த நாட்டுக்கு விமோசனம் இருக்காது. கொள்ளையடிக்கின்ற அரசுக்கு உதவி அளிக்க சர்வதேச நாடுகள் மற்றும் முதலீட்டாளர்கள் முன்வர வாய்ப்பில்லை. இவர்கள் மக்களால் வெறுக்கப்பட்ட, மக்கள் நிராகரித்த தலைவர்கள். இவர்களால் மக்கள் தொடர்ந்தும் வதைப்படமுடியாது.
கோத்தாபய ஆட்சிக்கு வரும்போது பருப்பு ஒரு கிலோ 65 ரூபா; இப்போது 535 ரூபா. தேங்காய் எண்ணெய் ஒரு போத்தல் 160 ரூபா; இப்போது 800 ரூபா. அன்று சிமெந்து ஒரு பைக்கற் 850 ரூபா; இப்போது 3,200 ரூபா. சமையல் எரிவாயு அன்று 1,400 ரூபா; இப்போது 5,200 ரூபா. பாண் ஒரு இறாத்தல் 50 ரூபா; இப்போது 160 ரூபா.
விலைகளே அதிகரித்திருக்கின்றன. ஆனால், சம்பளம் அன்று கோத்தாபய இருக்கும்போது கிடைத்த அதே சம்பளமும் அதை விடக் குறைந்த வருமானமுமே மக்களுக்கு கிடைக்கின்றது. எனவே, இந்த நிலைமையை மாற்றவேண்டும். இதற்காக மக்கள் அனைவரும் அணிதிரளுங்கள் - என்றார்.
(அ-எ-22)

### மின்வெட்டு...

யளவில் இந்த விபத்து நடந்துள்ளது.
சைக்கிளில் பயணித்த ஒருவர் வீதியைக் கடக்க முயன்றபோது, மோட்டார் சைக்கிள் மோதி விபத்து நடந்துள்ளது. விபத்தில் 25 வயது இளைஞன் ஒருவரும், 40 வயதான குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்துள்ளனர். விபத்தில் காயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.
இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.
அதேவேளை, விபத்தை அடுத்து கோப்பாய் ஆதார மருத்துவமனையில் நோயாளர் காவு வண்டியைக் கோரியபோதும், விபத்து நடந்த பகுதிக்கு நோயாளர் காவு வண்டியை அனுப்ப அவர்கள் மறுப்புத் தெரிவித்தனர் என்று சம்பவ இடத்தில் இருந்த மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (எ-125)

### நள்ளிரவில்...

யில் வீட்டிலிருந்தவர்கள் அசந்து தூங்கியுள்ளனர். நேற்றுக் காலை எழுந்து பார்த்தபோது வீட்டின் கதவுகள் அனைத்தும் திறந்திருந்தன. வீட்டில் இருந்த நகைகள் திருடப்பட்டிருந்தன.
இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், மோப்பநாயின் உதவியுடன் தேடுதல் நடத்தப்பட்டது. திருட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும், சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். அதேவேளை- திருட்டு நடந்த வீட்டிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் உள்ள வீடொன்றில் இருந்து கைத்தொலைபேசியும் திருடப்பட்டுள்ளது.
(அ-எ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்.குடாநாட்டில் டெங்குநோய்ப் பரவலில் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளின் தாக்கம்

சின்னத்தம்பி நோபிள் சுரேந்திரன்,
கோகிலா சிவபாலகிருஷ்ணன்
விலங்கியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்



( நேற்றைய தொடர்ச்சி...)

முடக்கத்தால் யாழ்.குடாநாட்டில் டெங்குப் பரவலிலும் சாதகமான விளைவு ஏற்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டில் கொரோனாத் தொற்றுக்கு முன்னர், யாழ் மாவட்டத்தில் 8ஆயிரத்து 261 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். 2020 ஆம் ஆண்டு, கொரோனாத் தொற்றுக் காலத்தில் பதிவாகிய டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 157 ஆகவும், 2021 இன் முதல் நான்கு மாதங்கள் வரை பதிவாகிய டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 94 ஆகவும் காணப்படுகின்றது (படம் 2). இங்கு ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், 2020 தொடக்கம் ஏப்ரல், 2021 வரையான காலப் பகுதியில் பருவ மழைக்காலங்களில் (செப்ரெம்பர் -பெப்ரவரி) கூட குறைந்த அளவு டெங்கு நோய் பரவலே நிகழ்ந்துள்ளது (படம் 2). எனவே இங்கு பதிவாகியுள்ள டெங்கு நோயாளிகளின் தரவுகள், கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த அமுலாக்கப்பட்ட முடக்கம், பயணத்தடை மற்றும் சமூக இடைவெளி பேணும் செயற்பாடுகள் டெங்கு வைரஸின் பரவலில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது.


இருப்பினும், டெங்கு நோயாயளர் குறைவடைந்ததமைக்கு கொவிட்-19 தொற்று மற்றும் கட்டுப்பாடுகள் காரணமாக எழுந்துள்ள பிற சாத்தியமான பங்களிப்புக் காரணிகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். கொவிட் 19 தொற்று மற்றும் டெங்கு நோய் இரண்டும் பொதுவான ஆரம்பகால மருத்துவ அறிகுறிகளை வெளிப்படுத்துவதால் நோயை வேறுபடுத்தியறிதலில் சிக்கலை ஏற்படுத்துகின்றன.

அத்துடன் கொவிட் -19 நோயாளிகளாக அடையாளம் காணப்பட்டு, தனிமைப்படுத்தப்படலாம் என்ற பயத்தில் லேசான டெங்கு தொற்று உள்ளவர்கள் மருத்துவ சிகிச்சை பெற தயங்குவதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

வேறுபட்ட கொவிட் -19 கட்டுப்பாடுகள் காரணமாக நோயாளர்கள் மருத்துவ சிகிச்சையை உடன் அணுகலில் சிக்கலேற்பட்டுள்ளமை (டெங்கு நோய் பரிசோதனை மற்றும் பதிவு செய்தல்) பதிவுசெய்யப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவதற்கு மற்றொரு சாத்தியமான காரணியாக அமைகின்றது.

### யாழ் குடாநாட்டில் குறைந்துள்ள டெங்கு நோய் பரவலும் அதுசார் நுண்ணறிவும்

உரிமம் பெற்ற தடுப்பூசி இல்லாத நிலையில், டெங்கு நோய் பரவுவதைக் குறைப்பதற்கான ஒரே நடவடிக்கை நுளம்பு நோய்க்காவிகளின் கட்டுப்பாடு மட்டுமே. டெங்கு நுளம்புகளின் பரவலும் டெங்கு கடத்துகை வீதமும், காலநிலை, சனத்தொகை அடர்த்தி, மக்களின் இயக்கம், மனித சூழலில் நுளம்பு குடம்பிகளின் வளர்ச்சிக்கான வாழ்விடங்கள் கிடைத்தல் மற்றும் பயன்பாட்டில் உள்ள நுளம்புக்காவிகளின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல காரணிகளில் தங்கியுள்ளது. யாழ்ப்பாணத்தில் டெங்கு நோய் பரவல் பருவமழை காலம் மற்றும் ஈடிஸ் நுளம்புகளின் உயிரியல் தன்மை ஆகியவற்றுடன் தொடர்புடையது.




படம்-2: 2017- மார்ச் 2021 காலப்பகுதியில் யாழ் குடாநாட்டில் பதிவாகியுள்ள மாதாந்த மழை வீழ்ச்சி மற்றும் டெங்கு தொற்றாளர்கள்

சமீபத்திய காலங்களில், யாழ் குடாநாட்டில் உப்பு மற்றும் மாசுபட்ட நீர்ச் சூழலில் டெங்கு நுளம்பு குடம்பிகளின் வளர்ச்சி ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டதுடன், அதிகரித்த டெங்கு நோய் கடத்துகை மற்றும் பரவல் அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கொவிட் தொற்றுக் காலத்தில் மக்களின் இயக்கம் மற்றும் டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறைந்துள்ள சமயத்தில் யாழ் குடாநாட்டில் குறைந்துவிட்ட டெங்கு நோய் பரவலானது தொற்றுநோயியலை புரிந்து கொள்வ தற்கான மேலதிக நுண்ணறிவுகளை வழங்கியுள்ளது.

### டெங்குத் தொற்று மற்றும் பரவுதலுக்கான மையப்புள்ளி

பொது முடக்கமானது மக்களின் நடமாட்டம் மற்றும் போக்குவரத்தை தடைசெய்யும் என்பதால், டெங்குப் நோய் பரவல் அந்த அந்த இடங்களில் பகிரப்பட்டதா (ஒரே வீடுகளில் வதிப்போர் / வீடுகளுக்கு வருகை தருவோர்) அல்லது தொலைதூர பகிர்வு (பாடசாலை, வேலை மற்றும் பயணம்) மூலம் நிகழ்ந்ததா என்பதை மதிப்பிடுவதற்கான ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்கியுள்ளது. திணிக்கப்பட்ட முடக்கம் மற்றும் தடைசெய்யப்பட்ட மக்களின் பயணம் ஆகியவை பொதுமக்களை தங்கள் வீடுகளில் அடைந்திருக்கச் செய்துள்ளன. பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் போன்ற கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன, அரசாங்க நிறுவனங்கள் குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களுடன் இயங்குகின்றன, பொதுக்கூட்டங்களுக்குத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் மக்கள் அடர்த்தியாக வாழ்கின்ற மற்றும் டெங்கு நோய் பரவும் பாரம்பரிய இடமாக விளங்கும் மேற்கு மாகாணத்துக்கான பயணம் அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் யாழ் குடாவில் டெங்கு நோய் பரவுதலானது உள்ளூர் கொத்தணிகளுடன் அல்லது ஒரே குடும்ப உறுப்பினர்களுக்குள் மட்டுப்படுத்தப்படவில்லை என்பதை .கூட்டாக சுட்டிக்காட்டுகின்றன. ஈடிஸ் நோய்க்காவி நுளம்புகளின் இருக்கை ஆண்டு முழுவதும் பதிவாகியிருப்பதோடு, யாழ் குடாநாட்டில் பல்வேறு வகையான நீர் வாழ்விடங்களில் ஈடிஸ் நுளம்புகளின் குறைவிருத்தி பருவங்களின் பரவல் உள்ள போதும் இங்கு டெங்கு வைரஸின் பரவுதல் எங்கிருந்து ஆரம்பிக்கின்றது என்பது தெளிவாக அறியப்படாத ஒன்றாகவே இருந்தது. இந்நிலையில் கொவிட்டுக்கு பின்னான தற்போதைய நிலைமைகள் யாழ்ப்பாணத்தில் டெங்கு நோய் பரவுதல் உள்ளூரில் பகிரப்பட்டதை விட தொலைதூர பகிர்வு (பாடசாலை, வேலை மற்றும் பிரயாணம்) மூலமே நிகழ்ந்தது என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

### டெங்கு நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

யாழ். குடாநாட்டில் டெங்கு நுளம்பினங்களின் தொடர்ச்சியான பரவல் காணப்படும்போதும் முடக்கல் காலத்தில் சுகாதார அதிகாரிகளால் வீடு வீடாக டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத சமயத்தில் குறைவடைந்துள்ள டெங்கு நோய் பரவும் வீதமானது யாழில் டெங்கு நோய்த் தாக்கமானது தொலைதூரப் பகிர்வு மூலமே நிகழ்கின்றது. முக்கியமாக டெங்கு ஆபத்து பகுதிகளுக்குச் செல்லும் மற்றும் வரும் மக்களின் இயக்கத்துடன் தொடர்புடையது என்பதை பரிந்துரைக்கின்றது. இருப்பினும் யாழ். குடாவில் டெங்கு நுளம்பு காவிகளின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பிரதானமாக இருக்கும் முடக்கத்துக்கு பின்னான காலத்தில் டெங்கு நோய் பரவும் முறை உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட வேண்டும்.

### யாழ்.குடாநாட்டில் குறைந்துள்ள டெங்கு நோய் பரவலை தொடர்ந்தும் தக்கவைத்தல்

யாழ் குடாநாட்டில் தற்போது காணப்படும் குறைந்த அளவிலான டெங்கு நோய் பரவும் நிலையை கொவிட்-19 அல்லது முடக்கலுக்கு பிந்தைய காலங்களில் கூட தக்க வைக்க உரிய சுகாதார அதிகாரிகள் தற்போது உள்ள நிலைமையை சரியான முறையில் ஆய்வுசெய்ய வேண்டும், முடக்கம், பயண கட்டுப்பாடு மற்றும் தடைசெய்யப்பட்ட பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றின் விளைவாக இங்கு டெங்கு நோய் பரவுதல் குறைவாக இருக்கின்றது. ஆனால், கொவிட்-19 தொற்றுக்கு பிந்தைய காலகட்டத்தில் இந்த நடவடிக்கைகளைத் தொடர முடியாது, டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டையே பிரதானமாக செயற்படுத்த முடியும். இருப்பினும் மறுபுறம், புதிய டெங்கு நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மக்கள் பயணத்தை கட்டுப்படுத்துவது தொடர்பாகவும், தொலைதூர பகிர்வு பரிமாற்றத்துக்கான காரணிகளை இல்லாமல் செய்தல் அல்லது கட்டுப்படுத்துதல் தொடர்பாகவும் பரிந்துரைக்கப்படலாம். உதாரணமாக டெங்கு நோய் பரவல் அதிகமாக உள்ள காலங்களில் நாட்டின் பிற பகுதிகளில் இருந்து டெங்கு ஆபத்து பகுதிகளுக்கு மக்கள் செல்வதற்கும் வெளியேறுவதற்கும் கட்டுப்பாடு விதித்தல், டெங்கு தொற்றாளர்கள் கண்டறியப்பட்ட பகுதியை முடக்குதல், டெங்கு நோய் பரவும் பகுதிகளில் உள்ள பாடசாலைகள் மற்றும் அலுவலகங்கள் போன்ற பொதுமக்கள் ஒன்றுகூடும் இடங்களை ஓரளவு அல்லது முழுமையாக மூடுதல். இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் டெங்கு நோய் பரவுதல் முன்னர் காணப்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் இல்லாதொழிக்கப்பட்டால், உள்ளூரில் டெங்கு நோய் பரவலைத் தடுத்தல் மற்றும் தக்கவைத்தல் பற்றிய நுண்ணறிவை இவை வழங்கும்.

### பரிந்துரைகள்

கொவிட்19 தொற்று பரவலாலும் அதனைத் தொடர்ந்து அமுலாக்கப்பட்ட கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் காரணமாக்வும் யாழ் . குடாநாட்டில் டெங்கு நோய் பரவல் குறைவடைந்திருந்தாலும், டெங்கு நோய் பரவுவதில் கொவிட்19 கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகளை புரிந்துகொள்ள மேலதிக ஆய்வுகள் தேவைப்படுகின்றன. அதுவரை நுளம்பு நோய்க் காவிகளின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பொது மக்கள் விழிப்புணர்வு மற்றும் பங்கேற்புடன் பலப்படுத்தப்பட வேண்டும். யாழ் மாவட்டத்தில் சுகாதாரத் துறையின் பெரும் பகுதியினர் கொவிட்19 தடுப்பு தொடர்பான வேலைத்திட்டங்களில் ஈடுபட அறிவுறுத்தப்பட்டிருப்பதால் சுகாதார அதிகாரிகளின் வீடுகளுக்கான மேற்பார்வை மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். எனவே நுளம்பு பெருக்கத்தை தடுக்கும் நடைமுறைகளை சுயமாகப் பின்பற்ற பொதுமக்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். அத்துடன் டெங்கு நுளம்புகளின் குறைவளர்ச்சி பருவங்கள் உவர் நீர் மற்றும் மாசுபட்ட நீரில் வளர்ச்சியடையக் கூடும் என்பதால்அவற்றின் பெருக்கத்தை கட்டுப்படுத்த பின்வரும் விடயங்களில் சுகாதார அதிகாரிகள் கவனம் செலுத்துவதோடு பொதுமக்கள் மத்தியிலும் அவை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

(i) கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் இடங்கள், வாழ்விடங்கள் மற்றும் நேரங்களை அடையாளம் காணுதல்.
(ii) கழிவு முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான தேவையை சுட்டிக்காட்டுதல்.
(iii) உவர் நீர் வாழ்விடங்கள், மேற்பரப்பு வடிகால்கள் மற்றும் வீட்டு கிணறுகளுக்கு நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை விரிவாக்கப்படவேண்டியதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுதல்.
(iv) திறந்த மேற்பரப்பு வடிகால்களை நிலத்தடி வடிகால்களாக மாற்ற வேண்டியதன் அவசியத்தை மீண்டும் வலியுறுத்துதல்.
(v) யாழ். குடாநாட்டில் நுளம்பு குடம்பிகளை திறம்பட அகற்றுவதாக முன்னர் நிரூபிக்கப்பட்ட குடம்பி யுண்ணும் மீன்களை நன்னீர் மற்றும் உவர்நீர் வீட்டுக் கிணறுகளில் வளர்ப்பதன் அவசியத்தை வலுவூட்டுதல்.
(vi) வீட்டுக் கிணறுகள் மற்றும் நீர் சேமிப்பு தொட்டிகளுக்கு நுளம்பு தடுப்பு வலைகளை போடவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துதல்.
(vii) ஈடிஸ் நுளம்பு நோய்க் காவிகளின் நிறையுடலி மற்றும் குறை வளர்ச்சிப் பருவங்கள் பற்றிய கண்காணிப்பு மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்துவதன் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டுதல்.

### முடிவுரை

இலங்கையில் கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்த நடைமுறைப்படுத்தப்பட்ட முடக்கம், அதனுடன் தொடர்புடைய பயண மற்றும் ஒன்றுகூடலுக்கான கட்டுப்பாடுகளின் விளைவாக யாழ் குடாநாட்டில் டெங்கு நோய் பரவல் மிகக் குறைவடைந்திருக்கின்றது. இவ்வாறு குறைந்துள்ள டெங்கு நோய் பரவலில் கொவிட்-19 தொற்று கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் தாக்கத்தை மதிப்பிடுவதற்கு மேலதிக ஆய்வுகள் தேவை. இவை கொவிட்-19 தொற்றிலிருந்து மீளும் காலங்களில் டெங்கு நோய் கட்டுப்பாட்டில் வரும் சவால்களை எதிர்கொள்ள அவசியமானவை. எனவே நுளம்பு நோய்க் காவிகளின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக புதிய டெங்கு கட்டுப்பாட்டு உத்திகளை அடையாளம் காண சுகாதார அதிகாரிகள் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் நெருக்கமாக பணியாற்ற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரியில் பிரபல்யமான பெண்கள் கல்லூரிக்கு பின்வரும் பதவி நிலைகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

- **தையல் போதனாசிரியர்**
- **ஆரி எம்பிராய்டரி (Aari Embroidery) போதனாசிரியர்**
- **அழகுக்கலை போதனாசிரியர்**
- **கேக் ஐசிங் போதனாசிரியர்**

**NVQ தகைமை அல்லது முன் அனுபவம் உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.** மேற்குறித்த பதவிகளில் பணியாற்ற விரும்புபவர்கள் தங்கள் தொழில் அனுபவம் மற்றும் கல்வித்தகைமையை குறிப்பிட்டு சுயவிபரக்கோவையை WhatsApp க்கு அனுப்பி வைக்கவும்.

**WhatsApp 076 135 4500**


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தாயின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 24 . 04 . 1963 | 04 . 05 . 2022 |

## உயர்திரு
## அமரர் ஆறுமுகம் ஆனந்தராசா (ரவி)

(கரவெட்டி பிரதேசசபை – மின் இணைப்பாளர்)

கடந்த 04.05.2022 அன்று வளர்பிறை சதுர்த்தி திதியில் இறைவன் அடிசேர்ந்த முதலி கோயிலடி கரணவாய் கிழக்கு கரவெட்டியை பிறப்பிடமாகவும் ஞானியார் வளவு இரும்புமதவடி வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட உயர்திரு அமரர் ஆறுமுகம் ஆனந்தராசா (ரவி) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (03.06.2022) வெள்ளிக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஷ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். நாளை (04.06.2022) சனிக்கிழமை வீட்டுக்கிருத்தியம் அவரின் இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் கலந்து மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

# 25 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் குணரத்தினம் சுந்தரலிங்கம்

(உரிமையாளர் லிங்கம் ஸ்ரோர்ஸ் - இளவாலை)



பாசத்தின் நினைவுகளை
பஞ்சவைந்தாண்டுகள் கடந்தும் - எம்
இதயக் கோவிலில் இருத்தி
- வழிபடுகின்றோம்
என் தந்தையே கண் கண்ட
- தெய்வமே
இறைவனடியில் இருப்பவரே - என்
வாழ்வு சிறக்க - நின்
ஆன்மாவின் ஆசி வேண்டி
- தொழுகின்றேன்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி

குடும்பத்தினர்
இளவாலை வடக்கு,
இளவாலை.

தோற்றம் 01.12.1948 | மறைவு 03.06.1997

# மரண அறிவித்தல்



## அமரர் சிவயோகன் இராஜகுமாரி

காரைநகர் களபூமி சத்திரந்தையை பிறப்பிடமாகவும் கல்லூரி ஒழுங்கை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவயோகன் இராஜகுமாரி 02.06.2022 வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.


அன்னார் காலஞ்சென்ற கம்பளை குமாரசாமி காலஞ்சென்ற அருளம்பல வாத்தியார் இன் அன்பு பேர்த்தியும் காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி (குமாரசுவாமி அன் கோ-கம்பளை) செந்தில்நாயகி தம்பதியரின் அன்பு மகளும் வைத்தியலிங்கம் அமிர்தவல்லி தம்பதியரின் அன்பு மருமகளும் சிவயோகனின் அன்பு மனைவியும் சுதனின் (London) பாசத்துக்குரிய தாயாரும் அருணகிரிநாதர் (குமாரசாமி அன் கோ-கம்பளை), காலஞ்சென்ற தேவகுஞ்சரி, காலஞ்சென்ற கமலக்கண்ணன் (கண்ணன் ஸ்ரோஸ்-கம்பளை), சாந்தகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பரம்சோதி (வெங்கடேஸ்வரா), சுரேந்திரன் (கிருஷ்ணா ஜுவலரி).சுவர்ணதேவி, நகுலேஸ்வரி காலஞ்சென்ற சிவகுமார், சிவபாலன், சிவகலை, சிவபூரணி, சிவகௌரி, சிவபாலன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 05.06.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் அன்னாரின் யாழ்ப்பாண இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியடி
55/14, கல்லூரி ஒழுங்கை
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
021 222 4853
[illegible]

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 . 11 . 1946 | 02 . 06 . 2022 |

## செல்லையா அருளானந்தம்

**(இளைப்பாறிய நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்)**

கோகிலாக்கண்டி மத்தியை பிறப்பிடமாகவும் வன்னியசிங்கம் வீதி, ஆவரங்கால் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா அருளானந்தம் நேற்று (02.06. 2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், நல்லையா - பாக்கியம் தம்பதியரின் மருமகனும், தனலட்சுமியின் பாசமிகு கணவரும், நிருசனின் (அமெரிக்கா) அன்புத் தகப்பனும், தயாநிதியின் (அமெரிக்கா) மாமனாரும், நகுலேஸ்வரன் (அவுஸ்திரேலியா), அமரர் தேவராசா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரனும், நகுலேஸ்வரி, யோகேஸ்வரியின் சகோதரனும், காங்கேயன், கஜமா முகன் ஆகியோரின் சிறிய தகப்பனும், ஆனந்தராசா, ஸ்ரீ இராஜகுமார், தேவராசா, சித்திரலேகா, பாக்கியம், அமரர் திருமா பத்தினி ஆகியோரின் மைத்துனரும், ஆரனியா, துஷேந்திரா, சாளினி, தாட்சாயினி, ஹரீசன், நிதீசன், நீலாஞ்சலி, சாய்மி, விலேக்கா ஆகியோரின் மாமனாரும், ஆதிராலி, மயூரேசன், மதுரந்தன், யஸ்வின் ஆகியோரின் பேரனும், காசினி, நிந்துஜாவின் சிறிய தகப்பனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆவரங்காலில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (03.06.2022) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வன்னியசிங்கம் வீதி,
ஆவரங்கால், புத்தூர்.

தகவல்: குடும்பத்தினர்
ந.ஆனந்தராசா (மைத்துனர்)
077 8328 944

(CR 8073) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்







வடமாகாணத்திலுள்ள 15 பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் அண்மையில் ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் தேவஸ்தான மண்டபத்தில் வழங்கப்பட்டன.

தாயகம் அறக்கொடை நிறுவனத்தின் இருபது லட்சம் ரூபா நிதிப்பங்களிப்பில் சீருடைகள், காலணிகள், புத்தகப்பைகள் ஆகியன வழங்கப்பட்டன. யாழ்ப்பாணத்திலுள்ள 10 பாடசாலைகளிலும், வவுனியாவிலுள்ள 4 பாடசாலைகளிலும், முல்லைத்தீவிலுள்ள பாடசாலை ஒன்றிலுமாக 889 மாணவர்களுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ஓ-14)


## கலை சங்கரா திருமண சேவை



Regd, No: DS/PP/FIN/BR/0104

எம்மிடம் வெளிநாடு, உள்நாடு, அரச உத்தியோக மணமக்கள் உள்ளனர்

- இத்திருமண சேவை அரச அங்கீகாரம் பெற்றது
- தகுந்த வரன்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

076 0867 065 / 074 0567 003
pirabapiragas@gmail.com Karanthai Pallai.
(cs 44978) (2.6)

## விற்பனைக்கு

பாவித்த நான்கு வெளி பாலை யன்னல் விற்பனைக்கு.
தேவை
10", 12" CHINA MECHINE பட்டறை
077 199 6117

## வேலை வாய்ப்பு

அலுவலக உதவியாளர் (4)
முகாமைத்துவ உதவியாளர் (3)
தேவை.
(CS 1108) (3/6)
076 092 8460, 076 684 9572


## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 04 | 02 |
| 12 | 06 |
| 1939 | 2022 |



### அமரர். சிவயோகபாக்கியம் கார்த்திகேசு

யாழ். துன்மலை இளவாலையை பிறப்பிடமாகவும், பம்பலப்பிட்டி அரச தொடர்மாடி G6ஜ வதிவிடமாகவும் கொண்ட சிவயோகபாக்கியம் கார்த்திகேசு அவர்கள் நேற்று (02.06.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துப்பிள்ளை, சீவரத்தினம் தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் கார்த்திகேசு (சுழிபுரம் மேற்கு) அவர்களின் மனைவியும் காலஞ்சென்றவர்களான ஜீவானந்தன், கருணானந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவஞானபாக்கியம் (மலேசியா), காலஞ்சென்றவர்களான சிவஞானரத்தினம் (சிறாப்பர்), சிவயோகரத்தினம் ஆகியோரின் அன்பு சகோதரியும், மகேஸ்வரி, பரமேஸ்வரி, விசாகப்பெருமாள் மற்றும் காலஞ்சென்றவர்களான முருகமூர்த்தி, சிவபாதம், வரதராசா, உருத்திரமூர்த்தி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

**அன்னாரின் பூதவுடல் 03.06.2022 வெள்ளிக்கிழமை காலை 08 மணி முதல் பொரளை ஜெயரட்ன மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மதியம் 02 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பொரளை கனத்தை மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.**

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் மற்றும் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

தகவல் - பேறாமகள்
கலாமதி - 077 5162487 / காந்திமதி - 077 6550526

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த 04.05.2022 புதன்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவி

### அமரர் குமாரகுலசிங்கம் விமலாதேவி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 01.11.1945 | 04.05.2022 |

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (03.06.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மதவடி லேன்,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
(CS 1027) (3/6)
குடும்பத்தினர்

உ
சிவமயம்

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 | 04 |
| 09 | 05 |
| 1934 | 2022 |



கடந்த 04.05.2022 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

### அமரர் தனுக்கோடி குணரத்தினம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (03.06.2022) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தொடர்ந்து நல்லூர் **"துர்க்கா மணிமண்டபத்தில்** நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்"

113, இராசாவின்தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.
(cs 44982) (2.6)
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 04.05.2022 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

### அமரர் புஸ்பவதி வயித்திலிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (01.06.2022) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (03.06.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"குமுதகிரி"
34 முத்தரூணி பிள்ளையார் வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி அழைப்பு

தோற்றம்
28 . 01 . 1933



மறைவு
15 . 04 . 2022

## திருமதி
## நடராசா சரஸ்வதி

**திதி: சதுர்த்தசி**

அவர்களின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை இன்று (03.06.2022) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மதியபோசன நிகழ்வும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து இந் நிகழ்வில் கலந்துகொள் ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**முதலியார் கோவிலடி,**
**அளவெட்டி வடக்கு, அளவெட்டி.**

**குடும்பத்தினர் சார்பாக**
**மில் சிறி**

(cs.44986) (2.6)

# ஓராண்டு நினைவேந்தல்

மலர்வு
31 . 08 . 1999



உதிர்வு
03 . 06 . 2021

## அமரர் யேசுதாஸ் சுபீட்சன் ரிபியுஸ்

(யாழ் பரியோவான் கல்லூரி
பழைய மாணவன் கிரிகெட் அணி வீரர்)

விடிவெள்ளியென எம் மடி தவழ்ந்த முத்தே
அடிமனதில் குடியிருக்கும் பெரும் சொத்தே
வெள்ளையுள்ளம் கொண்ட அன்பின் வித்தே
கிள்ளைமொழி பேசி பிள்ளைக்கலி தீர்த்த பூங்கொத்தே
கற்பனைகள் தகர்ந்து வீழ அகல்விளக்கு அணைந்ததுவோ
தேம்பி நாம் அழுகின்றோம் தேற்றிட வருவாயா?

சீர்மேவு கல்வி, விளையாட்டு சாதனை வீரனே
பேர்சொல்ல வந்துதித்து மகிழ்வுதந்த பாசமகனே!
எம் இல்லமும் உள்ளமும் வெற்றிடமானதையா
உன் ஆதாரமிழந்தோம் சேதாரமாகிவிட்டோம்
ஓராண்டில் உன் நினைவின்றி ஒருகணமும் கழியவில்லை
இறைபாதாரம் சேர கண்ணீரோடு வேண்டுகின்றோம்.


**கொழும்புத்துறை,**
**யாழ்ப்பாணம்.**

(cs1109) (2.6)

ஆறாத் துயரில்
**அன்புப் பெற்றோர்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
14 . 08 . 1945



மறைவு
04 . 05 . 2022

கடந்த 04.05.2022 புதன்கிழமை இறைபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர்
## நாகமுத்து இரத்தினசிங்கம்

அவர்களின் 31 ஆம் நாள் நிகழ்வனாது இன்று (03.06.2022) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறும் இந் நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னாரது மறைவுச் செய்தி அறிந்து பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**சுழிபுரம் மேற்கு,**
**சுழிபுரம்.**

(cs.44981) (2.6)

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## திருமதி சிவவாகீசர் உமாதேவி

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் தொல்புரம் மேற்கு சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.சிவவாகீசர் உமாதேவி கடந்த (01.06.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு சிதம்பரம் தம்பதிகளின் மூத்த புதல்வியும் சுப்பிரமணியம் சிவவாகீசரின் (முன்னாள் அதிபர் யா/திருஞான சம்பந்த வித்தியாலயம்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் திலகவதியின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான இராமநாதன் (முன்னைநாள் மேலதிக அரசாங்க அதிபர்), அருணாசலம், நவமணிதேவி மற்றும் கனகாம்பிகையின் அன்புச் சகோதரியும் சிவகுமாரன் (UK), சிவயோகன் (UK), தயாநிதி (ஆசிரியை மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயரும் மகாலட்சுமி (UK), செல்வநாயகி (UK), சிறீறங்கநாதன் (வருகைதரு விரிவுரையாளர் - தொழில்நுட்பவியல் கல்லூரி) ஆகியோரின் மாமியாரும் தனுசியா (UK - Scientist), மயூரன் (UK), ஜீவன் (UK), அன்வின் (UK), விந்துஜன் ஆகியோரின் பாட்டியும் குமுதினி (UK), கருணா கரன் (UK), தயாளினி (தலைவர் - சித்தமருத்துவ அலகு யாழ். பல்கலைக்கழகம்), சுதர்சினி (கொழும்பு), சொரூபினி (Australia) ஆகியோரின் மாமியாரும் Dr.திவாகரன் (நரம்பியல் நிபுணர்), உவர்ணா (கொழும்பு), இந்திராதேவி (UK) ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2022) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மூளாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிவாயு விநியோக ஒழுங்கு 03.06.2022

## யாழ்ப்பாண பிரதேச செயலகம்

| பெயர் | பிரிவுகள் | சிலிண்டர் எண்ணிக்கை |
|---|---|---|
| மரியாமல்ரிசொப் | ஜே/68,69 | 20 |
| தவம் ஸ்ரோர்ஸ் | ஜே/73,74 | 15 |
| லிங்கம் ஸ்ரோர்ஸ் | ஜே/86,84,83,85 | 20 |
| ஸ்ரார்பில்டர்வோட்டர் | ஜே/86,87,88 | 20 |

## நல்லூர் பிரதேச செயலகம்

| பெயர் | பிரிவுகள் | சிலிண்டர் எண்ணிக்கை |
|---|---|---|
| மாருதி ஸ்ரோர்ஸ் | ஜே/93 | 15 |
| ராஜசக்தி ஸ்ரோர்ஸ் | ஜே/99 | 15 |
| அம்பாள் ஸ்ரோர்ஸ் | ஜே/100 | 10 |
| கஜமுகன் ஸ்ரோர்ஸ் | ஜே/101,104 | 20 |
| சூர்யா ஹார்வெயார் | ஜே/111, 114 | 15 |

## கரவெட்டி பிரதேச செயலகம்

| பெயர் | பிரிவுகள் | சிலிண்டர் எண்ணிக்கை |
|---|---|---|
| உடுப்பிட்டி MPCS | ஜே/358,359 | 20 |
| கட்டைவேலி MPCS | ஜே/364,376,377 | 25 |
| ரூபி ஹாட்வெயார் | ஜே/375,360 | 10 |
| ரூபன் பார்ம் | ஜே/362,376 | 10 |
| நியூ மதி ஸ்ரோர்ஸ் | ஜே/351,350 | 10 |

## பருத்தித்துறை பிரதேசசெயலகம்

| பெயர் | பிரிவுகள் | சிலிண்டர் எண்ணிக்கை |
|---|---|---|
| ஜெயகணேசா ஸ்ரோர்ஸ் | ஜே/401 | 15 |
| நியூவே | ஜே/402 | 15 |
| சண் ஸ்ரோர்ஸ் | ஜே/403 | 15 |
| ரோகினி ஸ்ரோர்ஸ் | ஜே/409 | 15 |
| நந்தவனம் சுப்பர் மார்க்கெட் | ஜே/392 | 15 |

## தெல்லிப்பழை பிரதேச செயலகம்

| பெயர் | பிரிவுகள் | சிலிண்டர் எண்ணிக்கை |
|---|---|---|
| துஷ்யந்தன் ஸ்ரோர்ஸ் | ஜே/212,213,214 | 25 |
| சரவணா ஸ்ரோர்ஸ் | ஜே/227,229 | 25 |
| கந்தன் ஸ்ரோர்ஸ் | ஜே/231232,236 | 25 |

### *375 சிலிண்டர்கள்...*

கள் வீதம் 375 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர், தெல்லிப்பழை, பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலக பிரிவுகளுக்கே சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படவுள்ளன. (அ-ஒ-5)

### *ஆறு பில்லியன்...*

இலங்கையின் கடன்களை மீளச் செலுத்துவதற்கு 5 பில்லியன் டொலரும், வெளிநாட்டு ஒதுக்கத்தை வலுப்படுத்த ஒரு பில்லியன் டொலரும் தேவையாகவுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளுக்குச் செலுத்த வேண்டிய கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாமல் வங்குரோத்து நிலையில் உள்ள இலங்கை, உணவு, மருந்து போன்ற அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதிக்கான கட்டணங்களைச் செலுத்த முடியாத நெருக்கடியிலுள்ளது. பல்வேறு நாடுகளில் மானிய முறையில் டொலரைப் பெற்றுக்கொள்ள இலங்கை முயல்கின்றபோதும் இதுவரை சாதகமான விடயங்கள் நடக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. அதேநேரம் இலங்கையின் ரூபா மற்றும் டொலர் கையிருப்புக்கள் தீர்ந்து போகும் நிலையை எட்டியுள்ளன.

இந்தநிலையில் இலங்கை எதிர்வரும் மாதங்களில் கடும் நெருக்கடியைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று கூறப்படும் நிலையில், ஒன்றிணைந்த வணிக சங்கம், ஒளடத உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் வர்த்தக சம்மேளனம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் நேற்று நடத்திய சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த பிரதமர், இந்த மாத இறுதியில் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சை நிறைவு செய்யக் கூடியதாக இருக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

நிதி மற்றும் சட்ட ஆலோசகர்களை நியமித்ததைத் தொடர்ந்து, கடன் மறுசீரமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த பிரதமர், நன்கொடை அளிக்கும் நாடுகளுடன் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றது என்றும் குறிப்பிட்டார். (அ-எ-இ)

### *நீராடச்..*

வமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியா - தேக்கவத்தையைச் சேர்ந்த நதீசன் விதுசரன் (வயது-14), கைலாஸ் (வயது-16) ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர்.

தேக்கவத்தைச் சேர்ந்த நால்வர் நேற்று மாலை நீராடுவதற்காக ஈரப்பெரியகுளத்துக்குத் தங்கள் வளர்ப்பு நாயுடன் சென்றுள்ளனர். அவர்களில் இருவர் நீராடியபோது நீரில் மூழ்கியுள்ளனர். அவர்களைக் காப்பாற்ற முயன்றபோது, ஏனைய இருவரும் நீரில் மூழ்கியுள்ளனர்.

நீரில் மூழ்கிய இருவர் காப்பற்றப்பட்ட நிலையில், ஏனைய இருவரைக் காப்பாற்ற முடியவில்லை. அந்தப் பகுதி மக்கள், இராணுவத்தினர், பொலிஸார் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட நீண்ட நேரத் தேடுதலில் இருவரின் உடல்கள் மீட்கப்பட்டன.

உயிரிழந்தவர்களின் உடல்கள் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வவுனியா பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-110-18)

### *வெள்ளியில்...*

சேவைகளில் பாதிப்பு ஏற்படாது என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஊழியர் சேமலாப நிதியின் செயற்பாடுகளுக்கு தடையோ, தாமதமோ ஏற்படாது. ஊழியர்கள் வெள்ளிக்கிழமை அலுவலகத்துக்குச் செல்வதில்லை என்றபோதும், அவர்கள் வீட்டிலிருந்து வேலை செய்ய வேண்டும் என சுற்றறிக்கையின் மூலம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சராக மனுஷ நாணயக்கார நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, செலவினங்களைக் குறைப்பதற்காக அமைச்சு வழங்கிய பணிப்புரைக்கு அமைய இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அலுவலக மின்சாரம் மற்றும் போக்குவரத்துச் செலவுகள் உட்பட பல பராமரிப்புச் செலவுகளைக் குறைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும் என்று அமைச்சர் அண்மையில் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியிருந்தார். அலுவலகங்கள் திறக்கப்படும் நான்கு நாள்களிலும் தொழில்துறையின் பணிகள் அதிகபட்ச செயற்திறனுடன் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தல் தொழில் திணைக்களத்தில் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கே பொருந்தும். ஏனைய திணைக்களங்கள் மூடப்படுவது தொடர்பாக எந்த உத்தியோகபூர்வ அறிவித்தல்களும் வெளியாகவில்லை. (எ-இ)

### *தனியார்...*

போக்குவரத்துச் சங்கங்கள் அறிவித்துள்ளன. வடக்கு மாகாணத்தின் நிலைமை தொடர்பாகக் கேட்டபோதே தனியார் பஸ் போக்குவரத்து சங்கங்களின் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இது தொடர்பில் வடமாகாண தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் சி.சிவபரன் இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

தற்போது தனியார் பஸ் சாரதிகள் வரிசையில் நின்று எரிபொருளைப் பெறுகின்றனர். மக்களுக்கு சேவை வழங்குவதில் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எரிபொருளுக்குத் தட்டுப்பாடு நிலவும் நிலையில், எமக்கான எரிபொருளைப் பெற்றுத்தரவேண்டும் என்று வடக்கு மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையிடம் நாம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

எமது கோரிக்கையை அதிகாரிகள் நிறைவேற்றாவிட்டால் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தனியார் பஸ் சேவைகள் தடைப்படலாம் - என்றார்.

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டிணைக்கப்பட்ட பஸ் கம்பனிகளின் இணையத்தின் தலைவர் பொ.கெங்காதரன் இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாவட்ட பஸ்களுக்கான எரிபொருள் போக்குவரத்துச் சபைக்குரிய கோண்டாவில், பருத்தித்துறை, காரைநகர் சாலைகளில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்று கூறியுள்ளனர். எமக்கான எரிபொருள் சீராகக் கிடைக்காவிட்டால் யாழ்ப்பாணம் மாவட்ட உள்ளூர் பஸ் சேவைகள் இடம்பெறாது. இ.போ.ச. பஸ்களுக்கு மட்டும் எரிபொருள் வழங்க முற்படுவார்களாயின் தனியார் பஸ் சேவையைச் சேர்ந்த அனைவரும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட வேண்டிய நிலைமை ஏற்படும் - என்றார். (அ-எ-125)

### *மருத்துவமனைக்குள்...*

வமனைக்குள் புகுந்த இளைஞர் குழு ஒன்று மருத்துவரின் அறைக்குள் வைத்தும், அவரை வெளியே இழுத்தும் தாக்குதல் நடத்தியது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் 8 இளைஞர்களைக் கைது செய்தனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கொடிகாமம் மருத்துவமனைக்குச் சென்று சம்பவம் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார் என்று கூறப்படுகின்றது.


தனது தாத்தாவைச் சிகிச்சைக்கு அழைத்துச் சென்ற யுவதி ஒருவரிடம் மருத்துவர் தொலைபேசி இலக்கத்தைக் கேட்டார் என்று தெரிவித்தே இளைஞர் குழு தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-இ)

### *கோஷ்டி...*

கடற்றொழிலில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இந்த மோதல் நடந்தது என்றும், இரு தரப்பும் கொட்டன்கள், வாள்கள் கொண்டு தாக்கிக் கொண்டனர் என்றும் கூறப்படுகின்றது. தாக்குதலில் காயமடைந்த ஐவரும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-20)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# CHEMISTRY COURT
80, Arasady Road, Jaffna.

இரசாயனவியல்
2024 A/L
(தமிழ், ஆங்கில மொழி மூலம்)

(Direct & Zoom)
ஆரம்பம் : 04.06.2022
நேரம் : பி.ப 5.00

Rajah (B.Sc (Chem.Spl), P.G.D.E)
077 125 0086

(CS 1105) (3/6)

---

# TECHNO WORLD
## தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்

### A/L 2024 தொழில்நுட்ப பிரிவு

- பொறியியல் தொழில்நுட்பவியல்.
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்.
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்.
- I.C.T, விவசாயம், புவியியல், ஊடகக் கல்வி, கணிதம் (7), சித்திரம்.

திகதி : 05.06.2022 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.00 a.m.

(cr.8450) 2.6

Call Now: 077 017 5346

---

# பாராட்டி வாழ்த்துகின்றேன்

2020 A/L பரீட்சையில் தோற்றி என்னிடம் வணிகக் கல்வியை ஒரு பாடமாக தனியார் கல்வி நிறுவனங்களில் கற்று சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற பல்கலைக்கழகம் தெரிவானோரை பாராட்டி வாழ்த்துகின்றேன்.

## வணிகக்கல்வி வளவாளர்

### S.K. BALASABESH
B.Com [(H.N.Dip.In.Acc (ATI)], P.G.Dip.In. Edu.(OUSL)
யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை

மாவட்ட நிலை முதல் 10 இற்குள் பெற்றோர்



ஜெ.ரெனா
3A NEC
மாவட்ட நிலை 04
ஜெயவர்த்தனபுர (முகாமைத்துவம்)
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி



சி.சஜீதன்
3A HAC
மாவட்ட நிலை 05
ஜெயவர்த்தனபுர (முகாமைத்துவம்)
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி



சி.பானுசா
3A HAC
மாவட்ட நிலை 06
ஜெயவர்த்தனபுர (முகாமைத்துவம்)
யா/ வீரசிங்கம் மத்திய கல்லூரி



கி.சுதர்சன்
3A HAC
மாவட்ட நிலை 07
ஜெயவர்த்தனபுர (முகாமைத்துவம்)
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி



க.மாதங்கி
3A SKB Business Hall
மாவட்ட நிலை 08
ஜெயவர்த்தனபுர (முகாமைத்துவம்)
யாழ்ப்பாணக் கல்லூரி



ம.சரணியா
3A SKB Business Hall
மாவட்ட நிலை 08
திருகோணமலை
Zoom பிரத்தியேக வகுப்பு (சட்டபீடம்)
சண்முகா இந்து மகளிர் கல்லூரி



சயனுசா
3A SKB Business Hall
மாவட்ட நிலை 09
ஜெயவர்த்தனபுர (முகாமைத்துவம்)
யாழ்ப்பாணக் கல்லூரி

| இல | பெயர் | பல்கலைக்கழகம் | கற்கைநெறி | கல்வி நிறுவகம் | பாடசாலை |
|---|---|---|---|---|---|
| 08. | குயின்சா | ஜெயவர்த்தனபுர | முகாமைத்துவம் | HAC | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| 09. | அனுசியா | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | HAC | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| 10. | விதுசன் | கொழும்பு | முகாமைத்துவம் | தீபம் | யா/ சென்ஜோன்ஸ் கல்லூரி |
| 11. | நிரோசி | பேராதனை | முகாமைத்துவம் | NEC | யா/இந்து மகளிர் கல்லூரி |
| 12. | சிந்துமன் | ஜெயவர்த்தனபுர | முகாமைத்துவம் | HAC | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| 13. | சிந்துசன் | பேராதனை | முகாமைத்துவம் | HAC | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| 14. | நிருசன் | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | தீபம் | யா/ சென்ஜோன்ஸ் கல்லூரி |
| 15. | சாரங்கன் | ஜெயவர்த்தனபுர | வ.த.முகாமை | SKB.B.H | யா/ இந்துக்கல்லூரி |
| 16. | மதிநிலா | ஜெயவர்த்தனபுர | வியாபாரம் | HAC | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| 17. | தர்சினி | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | NEC | யா/வேம்படி மகளிர் கல்லூரி |
| 18. | ஹரிகரன் | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | NEC | யா/ மத்திய கல்லூரி |
| 19. | மிறோஜி | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | NEC | யா/ இந்து மகளிர் கல்லூரி |
| 20. | ஜெயந்தா | கிழக்கு | பொது முகாடமத் | HAC | யா/வீரசிங்கம் மத்திய கல்லூரி |
| 21. | தீபிகா | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | HAC | யா/வீரசிங்கம் மத்திய கல்லூரி |
| 22. | லூட்ஷ்சியோமி | களனி | கணக்.தகவல் | தீபம் | யா/திருக்குடும்ப கன்னியர் மடம் |
| 23. | அர்ஜனா | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | NEC | யா/திருக்குடும்ப கன்னியர் மடம் |
| 24. | சாரங்கன் | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | SKB.B.H | யா/வட்டு இந்துக் கல்லூரி |
| 25. | தேனுசா | ஜெயவர்த்தனபுர | சொத்து முகாமை | HAC | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| 26. | மேரிவடன்சிகா | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | NEC | யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி |
| 27. | அருண்சங்கர் | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | HAC | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| 28. | பிரியங்கா | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | NEC | யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி |
| 29. | வேனுகா | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | HAC | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| 30. | கிறிஸ்ரிகா | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | NEC | யா/வேம்படி மகளிர் கல்லூரி |
| 31. | துளசிகா | தென்கிழக்கு | முகாமைத்துவம் | HAC | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| 32. | தரணியன் | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | SKB.B.H | யா/சாவக. சைவப்பிரகாச வித்தி |
| 33. | லக்சிகா | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | NEC | யா/வேம்படி மகளிர் கல்லூரி |
| 34. | றொக்சினி | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | தீபம் | யா/திருக்குடும்ப கன்னியர் மடம் |
| 35. | பிரவீனா | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | NEC | யா/கொக்குவில் இந்துக் கல்லூரி |
| 36. | நிதுசா | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | தீபம் | யா/திருக்குடும்ப கன்னியர் மடம் |
| 37. | கீர்த்தனா | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | NEC | யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி |
| 38. | நிதுசன் | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | NEC | யா/கொக்குவில் இந்துக் கல்லூரி |
| 39. | ஆதித்தனா | தென் கிழக்கு | வியாபாரம் | HAC | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| 40. | நிவேதிகா | கிழக்கு | வியாபாரம் | தீபம் | யா/திருக்குடும்ப கன்னியர் மடம் |
| 41. | மதுசாயினி | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | NEC | யா/ இந்து மகளிர் கல்லூரி |
| 42. | சஜீவன் | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | SKB.B.H | யா/யாழ்ப்பாணக் கல்லூரி |
| 43. | தாரகா | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | HAC | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| 44. | கஜேந்திரகுமார் | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | SKB.B.H | யா/பண்ணாகம் மெய்கண்டான் |
| 45. | கோபிகா | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | NEC | யா/ இந்து மகளிர் கல்லூரி |
| 46. | சுஜனா | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | HAC | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| 47. | மேரிசன்சிகா | கிழக்கு | வியாபாரம் | HAC | யா/வீரசிங்கம் மத்திய கல்லூரி |
| 48. | ஹஜிஸ்ரன் | கிழக்கு | வியாபாரம் | தீபம் | யா/ மத்திய கல்லூரி |
| 49. | சஜிந்தா | கிழக்கு | வியாபாரம் | HAC | யா/வீரசிங்கம் மத்திய கல்லூரி |
| 50. | ஐஸ்வரியா | வவுனியா | முகாமைத்துவம் | NEC | யா/இந்து மகளிர் கல்லூரி |
| 51. | நித்தியா | வவுனியா | முகாமைத்துவம் | தீபம் | யா/திருக்குடும்ப கன்னியர் மடம் |
| 52. | சுதர்சிகா | வவுனியா | முகாமைத்துவம் | NEC | யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி |
| 53. | கெமன்சிகா | கிழக்கு | வியாபாரம் | தீபம் | யா/திருக்குடும்ப கன்னியர் மடம் |
| 54. | ஜென்சிகா | வவுனியா | முகா.கற்கைநெறி | NEC | யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி |
| 55. | லலிதாயினி | களனி | கண.தக.முகாமை | NEC | கிளி/பூநகரி மத்திய கல்லூரி |
| 56. | பிறோஜன் | ஜெயவர்த்தனபுர | விலை.விஞ்.முகா | NEC | யா/ இந்துக் கல்லூரி |
| 57. | கார்த்திகா | வவுனியா | முகா.கற்கைநெறி | SKB.B.H | மன்னார் இலுப்பைக்கடவை |
| 58. | லூசீனா | சப்பிரகமுகா | உணவு.முகாமை | தீபம் | யா/திருக்குடும்ப கன்னியர் மடம் |

CR36064) (3/6)

---

திருமாங்கல்யம் திருமண சேவை

1983 இல் பிறந்த உள்நாட்டு மணமகளுக்கு மணமகன் தேவை.

thirumaangalyam.com
077 120 4651, 021 728 4433

---

# நாவலர்
கல்வி நிலையம்

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.

## A/L - 2024
கலை, வர்த்தகப் பிரிவு

ஆரம்பம்: 03.06.2022 வெள்ளிக்கிழமை
காலை: 9.00 மணி

T.P.: 076 166 1986

---

# NEC
மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்

A/L 2024 — கலை, வர்த்தகம், கணிதம், உயிரியல்

(CR 36041) (3/6)

ஆரம்பம்
03.06.2022 வெள்ளிக்கிழமை
காலை 9.00 மணி

076 535 0999, 076 166 1986

---

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 51 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- A-9 வீதியில் இருந்து இரண்டாவது காணி 100M தூரம்.
- கைதடி வழி பிள்ளையார் கோயிலில் இருந்து 100M மீற்றர் தூரம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி. ✓ நன்னீரூற்று
- கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300 M தூரம்
- மூன்று வழிப் பாதை மேட்டு நிலம்
- கைதடி சந்தி 500 M தூரம்
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- 1 பரப்பின் விலை 3 லட்சம்
- பார்வையிடும் நேரம் காலை 8 மணிமுதல் மாலை 6 வரை

தொடர்பு: 077 6234 204
077 2880 152
076 4365 814

(CS 1107) 1-6

---

# A/L 2024 கணக்கீடு

பிரத்தியேக மற்றும் குழு வகுப்பு

யாழ் நகரின் முன்னணி ஆசிரியர்
திரு.க.பா பாலகஜன்
(Tutorial Staff)
(B.com (Jaf), H.N.Dip. in. Acc (ATI), Dip.in.Edu (Ousc), M.Com (Hons) Acc.Spl)

KBK Accounting College

| சுவாமியார் வீதி, கொழும்புத்துறை | பலாலி வீதி, கந்தர்மடம் |
|---|---|
| சனி, ஞாயிறு 2.00 - 3.00 pm | செவ்வாய், வெள்ளி 5.30 - 7.00 pm |
| 04.06.2022 சனி - 2.00 pm | 07.06.2022 செவ்வாய் - 5.30 pm |

---

# 2024 A/L பௌதீகவியல்
T.K.Kajan B.Sc
- Smart Science Centre (Neeraviyadi-Jaffna)
- முத்தட்டுமட லேன் கோண்டாவில்

(CS 1115) 1-6
077 653 1177

---

# A/L 2024 பௌதீகவியல்
M.KARUNANITHY B.Sc (Hons)
English and Tamil Medium
ஆரம்பம் - 05.06.2022 ஞாயிறு 3.30 PM
வெங்கடேசர் வீதி, யாழ்ப்பாணம்
NEW SCIENCE HALL அருகில்
A/L 2023 - அலைகளும் அதிர்வுகளும்

தொடர்பு:- 077 618 3064

---

# A/L - 2024
ஆரம்பம்:
05.06.2022 காலை 09.மணி

### வர்த்தகம்
- Acc - D.Sam
- Bst - T.S. நிசி
- Eco - S.S. சிறி

### கலை
- Tam - R.S. சந்திரசேகர்
- Hin - P. ஜேசீலவரன்
- His - M. பத்மன்
- Geo - N. பாபு
- P/S - K.S. இளங்கோ
- Log - E.S. பவன்
- Agr - V. சசி
- Chr - M. ரீமன்
- Dra - K. மாங்களேஸ்
- Med - K.V. நவநீதன்
- ICT - N. நம்பி
- H.Sci - V. சசி

### தொழில்நுட்பம்
- Sci . Tech - S. தயாபரம்
- Boi . Tech - K. ஜெனா
- Eng . Tech - N. ரஜித்தன், S. சத்தியதாஸ்

D.M.I - Jaffna 077 848 0604

---

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில்
4 பரப்பு காணி விற்பனைக்குண்டு

நிலப்பரப்பு
- A 32, A9 இணையும் பிரதான வீதியில் (றவுண்டப் வோட்)
- A9 பிரதான வீதியில் இருந்து 18அடி பாதையுடன்
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.

பார்வையிடும் நேரம் :
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு: ஜெயம்
077 814 7389, 077 241 7589

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.